www.padippakam.com



# கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன்

கலாநிதி சி. மௌனகுரு

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன்

## நீலாவணன் வாழ்வும் இலக்கியப் பணியும்

கலாநிதி. சி. மௌனகுரு
[பீடாதிபதி / கலை கலாசாரபீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்]

சவுத் ஏசியன் புக்ஸ்

SAB

தேசிய கலை இலக்கியப் பேரவை

படிப்பகம்

www.padippakam.com

Kaala Ottathinoode Oru Kavignan
Neelaavanan Vazhvum Ilakkiap Paniyum
Kalanithi C. Mounaguru
First Edition : March 1994
Printed at : Suriya Achagam, Madras-41
Published in Association with
National Art & Literary Association
by
South Asian Books
6/1, Thayar Sahib II Lane,
Madras-600 002.

Rs. 12.00

கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன்
நீலாவணன் வாழ்வும் இலக்கியப் பணியும்
கலாநிதி சி. மௌனகுரு
முதற் பதிப்பு . மார்ச் 1994
அச்சு : சூர்யா அச்சகம், சென்னை-41,
வெளியீடு : தேசிய கலைஇலக்கியப் பேரவையுடன்
இணைந்து
சவுத் ஏசியன் புக்ஸ்
6/1 தாயார் சாகிப் 2வது சந்து
சென்னை-600 002.

ரூ. 12.00

படிப்பகம்

www.padippakam.com

மனைவியும் நண்பியுமான
சித்ரலேகாவுக்கும்
மகனும் நண்பனுமான
சித்தார்த்தனுக்கும்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

ஆர்வமும் அர்ப்பணிப்பும் மிக்க இளைஞர் குழாத்தை உள்ளடக்கிய மட்டக்களப்பு வாசகர் வட்டத்தினர் 24.1.93 அன்று மட்டக்களப்பில் நீலாவணன் நினைவுப் பேருரையை ஒழுங்கு செய்திருந்தனர். அந்நினைவுப் பேருரைக்காகத் தயாரிக்கப்பட்ட கட்டுரை இது.

நம் காலத்தில் வாழ்ந்து; நம் காலத்திலேயே மறைந்துவிட்ட ஒரு கவிஞரைப்பற்றி நாம் எழுத நேர்ந்தமை மகிழ்வும், துயருந் தோய்ந்த ஓர் உணர்வையே தருகிறது.

ஈழத்தின் நவீன தமிழ்க்கவிதை வளர்ச்சியில் நீலாவணன் பங்கு குறிப்பிடற்குரியது. நவீன தமிழ்க் கவிதைக்குப் பங்காற்றிய ஈழத்துக் கவிஞர்கள் பற்றி தனித்தனியாக நூல்கள் வருவது அவசியம் எனக் கருது கிறேன். ஈழத்தின் தமிழ்க் கவிதைப் போக்கினைப் புரிந்து கொள்வதுடன், ஈழத்தின் தமிழ் இலக்கிய வரலாற்றினை எழுதுவதற்கும் அது உதவக் கூடும்.

கவிஞர் நீலாவணனைக் காலத்தின் பின்னணியிற் புரிந்துகொள்ளவும் அவர் கருத்துக்களும், கவிதைகளும் உருவான முறைமையை அறிந்து கொள்ளவும் எடுத்த முயற்சியின் வெளிப்பாடே இது.

நீலாவணன் பற்றிய ஒரு முழுமையான ஆய்வுக்கு இந்நூல் உதவுமாயின் எனக்கு அது மகிழ்ச்சி தரும்.

படிப்பகம்

www.padippakam.com



இக்கட்டுரை எழுதும் முயற்சியில் நான் ஈடுபட்ட போது எனக்கு ஒத்தாசை புரிந்த சிலர் ஞாபகத்திற்கு வருகிறார்கள். இந்தச் சொற்பொழிவை ஒழுங்கு செய்து முன்னின்று நடத்திய வாசகர் வட்ட இளம் ஆர்வலர்கள்; உரையாடி உதவிய வாசகர் வட்ட முக்கியஸ்தரும் தீவிர படிப்பாளியுமான வி. ஆனந்தன்; நீலாவணனின் படைப்புகள் பலவற்றை நறுக்காகச் சேர்த்துவைத்துத் தந்த அவர் மகன் எழில்வேந்தன் தகவல் தந்த நண்பர்கள் [முக்கியமாக எழுத்தாளர்களான திரு. வ சு. இராசரத்தினம்; எஸ். பொ.] அனைவரும் நன்றிக்குரியவர்கள்.

இதற்கு முன்னுரை வழங்கியவர் என் அன்புக்கும் மதிப்புக்குரிய ஆசிரியர் பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள் என் நூல்கள், கட்டுரைகள் வெளிவந்ததும் விமர்சன பூர்வமாக அவர் எழுதும் கடிதங்கள் எனக்கு என்றும் பயன் தருவன; உற்சாகமூட்டுவன. அவருக்கு என் மனமார்ந்த நன்றிகள். என் நூல்களை வெளியிடுவதில் ஆர்வம் காட்டும் தேசிய கலை இலக்கியப் பேரவையினரும், முக்கியமாக நண்பர் திரு. சோ. தேவராஜாவும் என்றும் நன்றிக்குரியவர்கள்.

சி. மௌனகுரு

*கலை / கலாசாரபீடம்*
*கிழக்குப் பல்கலைக்கழகம்*
*மட்டக்களப்பு*
*28—3—1994*

www.padippakam.com

# அணிந்துரை

கவிஞர் நீலாவணனின் வரலாறு அவரது உற்றாரினதும் உறவினரதும் ஊராரினதும் கவனத்துக்கு மட்டும் உரியதன்று. ஒரு கவிஞரின் அனுபவமும் உலக நோக்கும் வளர்ந்து சென்றவற்றை மட்டுமின்றி, எமது நாட்டின் சமூக, அரசியல், இலக்கியப் போக்குகளையும் விண்டுகாண விழைவோர்க்கு அவ்வரலாறு பயன்படத்தக்கது. ஆகையினால், இதுவரை காலமும் அது எழுதப்படாதிருந்த பெரும் குறையினை நிவர்த்தி செய்ய முன்வந்த கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி கலாநிதி சி. மௌனகுருவின் முயற்சி உவந்து வரவேற்கப்பட வேண்டியதாகும்.

சிறுகதை, கட்டுரை, நாடகம். உருவகக்கதை, விமரிசனம், சஞ்சிகை வெளியீடு முதலான துறைகளிலெல்லாம் ஈடுபட்ட போதிலும் நீலாவணன் சுவடு பதித்ததும் பாரம்பரையொன்றை உருவாக்கியதும் கவிதைத் துறையிலே ஆகும். நாற்பத்துநான்கு ஆண்டுகளே வாழ்ந்து பல்வேறு புனைபெயர்களில் எழுதிய கே சின்னத்துரையின் நீலாவண்ணன் என்ற நாமம் தமிழிலக்கிய உலகில் நிலைத்துவிட்டது.

காலிமுகக் கடற்கரையில் 1962இல் சில மாலைப் பொழுதுகளை நீலாவணன் தம்பதியருடன் எஸ். பொன்னுத்துரை, ஏ. ஜே. கனகரத்தினா சகிதம் இலக்கிய உரையாடல்களில் கழித்த நினைவு என் நெஞ்சிற் பசுமையாகவே உளது. பரஸ்பர பிரியத்துக்குரிய இலங்கையர்கோன், டாக்டர் எம். முருகேசம்பிள்ளை ஆகியோரைப் பற்றி நீலாவணனுடன் சிலாகித்துப் பேசியதும்,

படிப்பகம்

www.padippakam.com



ஞாயிற்றுக்கிழமைகளில் ஷேவ் எடுக்காமல் இருப்பது ஒரு சுகம் என்று இலங்கையர்கோன் அடிக்கடி குறிப்பிடுவது உண்டென்று நீலாவணன் கூறியதும், 'சேவெடுக்காத சுகம்' என்பதை இறுதியடியாகத் தந்து இலங்கையர்கோன் நினைவாகத் தினகரன் பத்திரிகையில் ஒரு வெண்பாப் போட்டி நடாத்தியதும், அதற்கு நீலாவணனின் ஒரு சிறப்பு வெண்பா யாத்தளித்ததும் மறக்கற்பாலனவல்ல. நீலாவணனின் கம்பீரமான பேச்சும், பிடித்தவற்றையும் பிடிக்காதவற்றையும் திறந்துகாட்டும் வெள்ளை மனமும், தமிழுணர்ச்சியும், அமைதியான கிராம வாழ்வினை இலட்சியப்படுத்திய தன்மையும், சமத்துவ வேட்கையும், கவிதை ஆற்றலும் என்னைக் கவர்ந்தவை.

நல்லதொரு நண்பராகவும் குடும்ப பாசம் மிக்கவராகவும் அவர் காணப்பட்டார். மனைவியிடத்தும் மக்களிடத்தும் அவர் மதிப்பும் அன்பும் நிறையவே காட்டினார். தனது ஊர் மீதும் அவர் பற்று மிகுந்தவராகத் திகழ்ந்தார். ஷெல்லியிடத்துப் பற்றுக்கொண்ட சுப்பிரமணிய பாரதி ஷெல்லிதாசன் என்ற பெயரிலும், கம்பனிடத்துப் பற்றுவைத்த ராஜப்பா கம்பதாசன் என்ற பெயரிலும் எழுதினார்கள். பெரிய நீலாவணை என்ற கிராமத்தில் பற்றுவைத்த காரணத்தால் நீலாவணன் என்ற பெயரினைச் சின்னத்துரை வரித்துக் கொண்டார். வேளாண்மை என்று தமது இல்லத்துக்கு நாமம் சூட்டியமை அவரது கிராமிய வாழ்க்கைப் பற்றினைக் காட்டுவதாகவே தோன்றுகிறது.

நீலாவ்ணனும் அவரது கவிதைகளும் அடைந்த வளர்ச்சியினைத் துலக்கப் புகுந்த கலாநிதி மௌனகுரு மூன்று கட்டங்களாக வகுத்து அதனை நோக்குகின்றார்.

1948இல் எழுதத் தொடங்கிய நீலாவணன் ஆரம்ப காலத்தில் திராவிடமுன்னேற்றக் கழகத்தில் செல்வாக்குக்கு ஆட்பட்டிருந்தமை தெரிகிறது. அக்காலப்பகுதியின்

www.padippakam.com



தமிழிலக்கியத் துறையில் ஈடுபட்ட பலர் திராவிட இயக்கச் சீர்திருத்தப் பிரசாரங்களினாலும் பகுத்தறிவு வாதங்களினாலும் கவரப்பட்டவர்களே. பாரதிதாசனின் செல்வாக்குக்கு ஆட்பட்ட நீலாவணனிடம் முத்தொள்ளாயிரம், நந்திக்கலம்பகம், கலிங்கத்துப்பரணி ஆகியவற்றின் செல்வாக்கும் ஓரளவுக்குத் தெரிகிறது. உருவக வளமும் ஓசைநயமும் கூடிய உணர்ச்சிக் கொந்தளிப்பினைக் காணமுடிகிறது தமிழ் உணர்வோடு தமிழுரிமைகளை நிலைநாட்டுவதிலும் குறைகளைக் களைவதிலும் வேட்கை மிகுந்த நீலாவணன் குறிப்பிட்ட ஓர் அரசியல் இயக்கத்துடன் இணைந்து நின்றபோது தமிழபிமானிகள் எனத் தாம் கருதியவர்களைப் போற்றியும் தமிழ்த் துரோகிகள் எனத் தமக்குட்டவர்களைத் தூற்றியும் சில கவிதைகளை எழுதியுள்ளார்.

பொதுவாக நீலாவணனின் ஆரம்பகாலக் கவிதைகளை, அக்காலப் பெருவழக்கையொட்டித் தமிழ், காதல், இயற்கை என்ற தலைப்புக்களுள் அடக்கலாம். சீதன முறை, சாதி வழக்கு, போலிவேஷம், ஊழல் முதலானவற்றைச் சாடும் தன்மையினை அவற்றிற் காணலாம். ஆரம்பத்தில் பாரதிதாசன் பாணியில் எழுதிய நீலாவணனிடம் அவருடையதெனக் குறிப்பிடத்தக்க ஒரு பாணி அமைய முதற்காரணமானது பிரதேசச் சூழலை அதன் பேச்சு வழக்கோடு சித்தரிக்க முனைந்தமையே போலும்

தமிழும் காதலும் சம்பந்தமான கவிதைகளோடு ஆன்மீகச் சார்பான கவிதைகளையும் நீலாவணன் இயற்றிய காலகட்டத்தை இரண்டாவதாகக் கலாநிதி மௌனகுரு கொள்கிறார். வாழ்க்கைப் புதிர்களை விண்டுகாணும் வேட்கையில் மனித நடத்தைகள், பழக்க வழக்கங்கள், பிரதேசப் பண்புகள் முதலியவற்றின்பால் நீலாவணனின் பார்வை மிகுதியாகத் திரும்புகிறது. மனித உழைப்பு, முயற்சி, நம்பிக்கை போன்றவை குறித்து அவர் சிந்திக்கிறார்.

www.padippakam.com



''சென்றே உலகைக் கருவாக்கி
நல்ல செந்தமிழில்
இன்பக் கவிதை பலசெய்து
வாழ்தல் இலட்சியமே.''

என்ற அவரது கூற்று இங்கு கவனிக்கத்தக்கது.

அடுத்த காலகட்டத்தில் உலகியல் வாழ்வில் நீலாவண னின் நம்பிக்கை நிலைப்பதையும், அவரது சமூக அக்கறை மிகுவதையும், பார்வை பரந்து தெளிவதையும் கலாநிதி மௌனகுரு காண்கிறார். குறிக்கோளுடனும் யாருக்காக, ஏன், எதை எழுதுகிறோம் என்ற விளக்கத்துடனும் மனிதாபிமான உணர்வுடனும் நிமிர்ந்த நீலாவணன் சிறந்த கவிதைகளையும் சிறுகதைகளையும் படைக்கலுற்ற வேளையில் மறைந்துவிட்டமை தமிழிலக்கிய உலகுக்குப் பேரிழப்பாயிற்று.

நீலாவணனின் படைப்புக்களை ஒருமித்து நோக்கு மிடத்து, மானிட மேம்பாட்டு விருப்பும், அநீதிகளையும் துயரங்களையும் துடைக்கும் வேட்கையும், 'ஊக்கமும் உள்வலியும் உண்மையிற் பற்றும், அவரிடம் என்றும் காணப்பட்டதை அவதானிக்கலாம். பிரதேச சூழல் உறவு, தமிழ்ப்பற்று, சிருஷ்டியாற்றல், உணர்ச்சி நலம், ஓசைநயம் முதலானவை அவரிடம் சிறந்து விளங்கின.

காலப்பின்னணியில் நீலாவணனின் ஆளுமையும் படைப்புக்களும் உருப்பெற்றவற்றைக் கலாநிதி மௌன குரு இந்நூலில் ஆராய்கிறார். நீலாவணனின் பலங்களை யும் ஒருசில பலவீனங்களையும் சுட்டிக்காட்டுகிறார். கவிஞ ரது நடையழகும் ஓசைநயமும் ஆங்காங்கு எடுத்துக்காட் டப்படுகின்றன. கலை இலக்கிய வரலாற்றிலும் திறனாய் விலும் ஈடுபாடு மிகுந்தவராக மட்டுமன்றி படைப் பாற்றல் மிக்கதோர் எழுத்தாளராகவும் திகழும் கலாநிதி

www.padippakam.com



மௌனகுரு இந்நூலினை எழுதப்புகுந்தது பொருத்தமான தென்பது தெளிவாகிறது.

நீலாவணனுக்கும் மௌனகுருவுக்கும் இடையில் சில ஒற்றுமைகளைக் காணலாம் எனவும் தோன்றுகின்றது. இருவரும் படிப்போரைப் பிணிக்கும் வகையில் எழுதுகின்றனர். ஏனைய படைப்பாளர்களைப் பரிவோடு உணரும் திறன் இருவரிடத்தும் காணப்படுகிறது. பல்வகைச் சிந்தனைகளையும் கல்மிஷமின்றி அணுகி ஆராயும் இயல்பு காணப்படுகிறது. இருவரும் விமரிசிக்கவும் விமரிசிக்கப்படவும் தயாரானவர்களாகவும் குறைகளைத் திருத்த உடன்படுபவர்களாகவும் காணப்படுகின்றனர்.

நீலாவணனைப் புரிந்துகொள்வதோடு நவீன தமிழிலக்கியப் போக்குகளை, சிறப்பாக ஈழத் தமிழிலக்கியப் போக்குகளை விளங்கிக்கொள்ளவும் இந்நூல் உதவுவதாகும் வார்த்தைகள் வாயிலாக வெளிப்படையாகக் கூறப்படுவனவற்றுக்கு அப்பாலும் பலவற்றை உய்த்துணரக்கூடுமென்றும் தோன்றுகிறது. நீலாவணனை அல்லது நவீன தமிழ்க் கவிதையைப் பற்றிய விரிவான ஆய்வுகளுக்கு இந்நூல் உதவியும் உற்சாகமும் அளிக்கவல்லது.

சி. தில்லைநாதன்
தமிழ்ப் பேராசிரியர்

பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை.
03.08.1993

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஆசிரியரின் பிற நூல்கள்

1. 20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம் (இணை ஆசிரியர்)
2. நாடகம் நான்கு (இணை ஆசிரியர்)
3. சடங்கிலிருந்து நாடகம்வரை
4. தப்பிவந்த தாடி ஆடு (சாஹித்திய மண்டலப்பரிசில் பெற்றது)
5. மௌனகுருவின் மூன்று நாடகங்கள்.
6. பழையதும் புதியதும்
7. ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு
8. சங்காரம் - அவைக்காற்றுகையும் தாக்கமும்
9. விபுலாநந்தர் காலமும் கருத்தும்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஆரம்பம்

நீலாவணன் என்று ஈழத்து இலக்கிய உலகிலே அறியப்பட்ட திரு. கே. சின்னத்துரை அவர்கள் 31-6-1931இல் பிறந்தார். 11-1-75இல் இறந்தார். நமது 45ஆவது வயதிற் காலமான இக்கவிஞர் 28 வருடகாலம் எழுத்துப் பணி புரிந்தவர். சிறுகதை, கட்டுரை, பா, நாடகம், உருவகக்கதை, உரைநடைச் சித்திரம், விமர்சனம் என்று இலக்கியத்தின் பல துறைகளிற் பணியாற்றினும் கவிஞராகவே அவர் இலக்கிய ஆர்வலர்கள் மத்தியில் மதிக்கப்படுகின்றார். இக்காலகட்டத்தில் ஈழத்தில் வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்திலும் அவர் ஆக்கங்கள் வெளியாகியுள்ளன; சிறப்பாக அவரது கவிதைகள் இடம் பெற்றுள்ளன. அவரது கவிதைகள், ஆக்கங்கள் அனைத்தும் முழுமையான தொகுதியாக வெளிவராமை துரதிஷ்டமே.

அவர் இறந்தபின் அவரது கவிதைகளைத் தொகுத்து வெளியிட 23-2-75இல் உதய கலியைத் தலைவராகவும் அன்பு முகைதீனைச் செயலாளராகவும் கொண்ட நீலாவணன் நூல் வெளியீட்டுத் தற்காலிக அமைப்புக்குழு கல்முனை உவெஸ்லிக் கல்லூரியிற் கூடியது. நூல் வெளியீட்டுப் பேரவை அமைக்கும் இம்முயற்சி பின்னாற் கைகூடவில்லைப் போலும்.

நீலாவணன் தான் இறப்பதற்கு முன்னரேயே நூலாக வெளியிடத் தமது கவிதைகள் சிலவற்றைத் தொகுத்து வைத்திருந்தார். அவற்றுள் மிகப் பெரும்பாலானவை 1960 களுக்குப்பின் அவர் எழுதிய கவிதைகளாகும்.

கா—2

படிப்பகம்

www.padippakam.com



அதனை 'வழி' என்ற பெயரில் அவர் துணைவியார் அழகேஸ்வரி அவர்கள் 1976இல் வெளியிட்டார் நுஃமான் இவ்வெளியீட்டிற் பெரும் பங்கு கொண்டார். நூல் வெளியீட்டுப் பேரவையும் இதிற் பங்கு கொண்டது.

நீலாவணனின் இலக்கிய நண்பரான திரு. வ. அ. இராசரத்தினம் நீலாவணனின் வேளாண்மை என்று குறும் காவியத்தை வெளியிட்டார்.

இவ்விரு நூல்களும் நீலாவணனின் கவிதை ஆற்றல், சிந்தனைப் போக்கு, உலகப் பார்வை என்பனவற்றை அறிந்து கொள்ள தமக்கு உதவும் மூல ஆவணங்களாகும். அதிலும் வேளாண்மை நீலாவணன் கவிதா முதிர் வடைந்த காலத்தில் எழுதப்பட்ட நூலாகும்.

இவ்விரு நூலகளையும் தவிர 1953இலிருந்து இறக்கும் வரை சுதந்திரன், ஈழநாடு, வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, தேசிய முரசு, தேனருவி, தமிழின்பம், மல்லிகை தீபம், மரகதம், தென்றல், கலைமகள், வெற்றிமணி, தமிழ்க்குரல், இளம்பிறை, பாடும்மீன், கவிஞன் ஆகிய இலங்கை, இந்தியா இதழ்களிலும் ஆசிரிய கலாசாலை மலர்களிலும் கிடைத்த இவரது ஆக்கங்களும் நீலாவணன் பற்றிய இப்பேச்சுக்குத் துணைபுரிந்தன.

அத்தோடு நீலாவணனின் மகன் எழில்வேந்தனுடன் நடத்திய பேட்டியும், நீலாவணனுடன் பழகிய நண்பர்கள் தந்த தகவல்களும் உதவின.

கிடைத்த தகவல்களை வைத்துக்கொண்டு 45 வருட காலம் ஈழத்தின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்து, ஒரு எழுத்தாள பரம்பரையை உருவாக்கிய ஓர் கவிஞனை அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் எடுக்கும் முயற்சி இது. ஆரம்ப முயற்சியே இது; முழுமையான முயற்சியன்று. மேலும் தகவல்கள் கிடைக்குமிடத்து இக்கட்டுரை முழுமை பெறும் வாய்ப்புண்டு இலக்கிய ஆராய்வாளர் கள் அதனைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com

# இரண்டு கவிதைகள்

ஒரு மனிதனின் ஆளுமையை, வளர்ச்சியைப் புரிந்து கொள்ள சில குழூஉக்கள் கிடைக்க வேண்டும். நீலாவணனின் இரண்டு கவிதைகள் எனக்கு அவரை இனம் காணப் பேருதவி புரிந்தன. ஒரு கவிதை 18-12-60ல் சுதந்திரனில் எழுதிய குறிக்கோள் என்ற கவிதை. 11 விருத்தப்பாக்களில் 88 அடிகளில் அமைந்த அக்கவிதையின் உட்பொருள் இதுதான், மழையின் வருகையினால் நதிக் குழவி மலையில் உற்பத்தியாகிறது. பின்னர் குழவி இள நதியாகி அணைகளை, குளங்களை உடைத்து குவலயத் தவர் தொழப் பாய்ந்து செல்கிறது. பழமையைப் பேசி வாழும் கிழ நதியை இவ்விள நதி கிண்டல் செய்கிறது, பழமையிற் சலிப்புக் கொள்கிறது, இறைவனைத் தேடி அலைதல் அறியாமை என்கிறது. இளநதியின் போக்கைக் கண்டு கிழ நதி அமைதியாகச் சிரிக்கிறது. பாட்டனாரை விட்டு இளநதி காட்டுவேன் புதிய பாதையென் றெண்ணிக் காட்டிலே பாய்ந்து செல்கின்றது. கவிதை இவ்வாறு தொடர்கிறது,

இலட்சியமற்ற இவர்களைத் தொடரின்
எய்துமோர் பயன் எனக் கெதுவோ?
அலட்சியம் புதுமையை அனுபவித்திடுதற்கு
ஆர்வமே சிறிது மற்றவர்கள்
குலத்தவர் புரிந்தார் என்பதற்காக
குருடனாய் வாழ்வதோ? குறிக்கோள்
நிலைத்தது பாதையும் நீண்டது மேலும்
நீண்டது இள நதி ஓடி.

போக பூமியிலே புகுந்தவர் போலும்
புரட்சியை விளைத்தவர் போலும்
ஏகனாம் எங்குளன் விடைதான்
இயம்புதற்கு எவருளார் ஈங்கு
ஆகவே புதுமை அனுபவித்திடுவோம்.

படிப்பகம்

www.padippakam.com



ஆர்ப் எனக் இள நதி பாய
மோகமோ துவோ மேருவோ எனும்படி
மிடுகொடும் நின்றதோர் மலையே.
தோற்றது நதியின் துடிப்பொடு குறிக்கோள்
தொலைந்தது இளமையின் கீதம்
ஆற்றுதற் இதயம் அதனிடம் ஏது
அனுபவம் அடைந்த தவ்வேளை

பாய்ந்து சென்ற பின் அனுபவம் பெற்ற வேகத்தை யடக்கிய இள நதி, நெஞ்சம் உளையவும், திரும்பி பாட்டன் பாதையில் ஓடுகிறது. பழமை வெல்கிறது; புதுமை தோற்கிறது. நதியைக் குறியீடாக வைத்து பழமைக்கும். புதுமைக்கும், ஆத்திகத்திற்கும் நாத்திகத் திற்குமிடையில் நடைபெறும் வாதத்தைக் கருவாக்கி பழமை வெல்வதாக, அப்பாடல் முடிகிறது.

நதியைக் குறியீடாக்கி நீலாவணன் இன்னொரு கவிதையும் செய்துள்ளார் அக்கவிதை 18-9-69ல் ஈழ நாட்டில் வெளிவந்துள்ளது. முன்னர் சொல்லப்பட்ட கவிதை எழுதி ஏறத்தாழ 10 ஆண்டுகளின் பின் எழுதிய கவிதை இது. அக்கவிதையின் தலைப்பு உச்சியை நோக்கி ஓடும் ஆறுகள் என்பதாகும், தலைப்பே கவிதைப் பொருளை உணர்த்துகின்றதல்லவா?

வங்கக்கடலில் கங்கை, ஊற்றெடுத்து பூமியை நோக்கிப் பாய்கின்றது. மக்களுக்கு தங்கமும், தரளமும், மணிகளும் தந்து கங்கை பாய்ந்து செல்கின்றது; கங்கையே கங்கையே எங்கு செல்கின்றாய்? என்று கேட்ட மக்களுக்கு கங்கை தோழர்காள் நாம் உமது தொண்டர்கள், வையகம் வாழவும், நூல்கள் உயிறனைப் பெரும்பசிமாளவும் வேண்டி மாமலை நோக்கி மாபெரும் பயணம் செய் கிறோம்'' என்கிறது, தொடர்ந்து

www.padippakam.com



அதோ ஒரு நெடிய அம்புலிச்சிகரம்
மதமதத்துயர்ந்த அம்மலைச் சிகரத்தினை
எது தடைவரினும் ஏறுவோம் ஏறி
பொதுமையைப் பேணிப் புதுவுலகாள்கிற
அதிகாரத்தினை அடைகுவோம். அதுவரை
தோழர்காள் அயராதுழைப்போம்
புதுஉலகத்தையோர் புரட்சியிற் படைக்கவே

என்று கூறிய நதி மக்களைப் பார்த்து மீண்டும் கூறுகிறது.

மலைகளைக் குடைவீர்! மடுவினில் இடுவீர்
தொலைமிக உளதே தோண்டுக மேடுகள்
இலையாவிடில் நாம் விரைவாய் ஓடலாம்.
களையேல்! மலைகள் பறிமின்? எறிமின்
பள்ளமும் மேடும் பரவலாய் விட்டால்
துள்ளியும் பாய்ந்து தொடுவோம் உச்சியை

இதைக்கேட்டுத் தோழர்கள் அனைவரும் பாடலை இசைக்க ஆறுகள் உச்சியை நோக்கி ஓடத் தொடங்குகின்றன.

இக்கவிதை 41 அடிகளமைந்த ஆசிரியப்பாவில் அமைந்துள்ளது. ஒரு கவிதையிற் பேசப்படுவது ஆன்மிகம், மலையைக் கண்டு மயங்கிய ஆறு அங்கு பழமையையே மீண்டும் நாடுகிறது. இன்னொரு கவிதையிற் பேசப்படுவது சமூகம் மலையை உடைத்து மேலும் அது உச்சியை நோக்கி இங்கு ஓடுகிறது. இந்நதி மலையைக் கண்டு பயந்த நதியன்று மலையைத் தகர்த்து அதனையும் தாண்டிச் செல்ல முயலும் நதி.

60இல் பின்வாங்கிய ஆறு 70இல் முன்னோக்கி ஓடுகிறது. இக்குறியீடு நீலாவணனின் கவிதைகட்கும் பொருந்தும் போல எனக்குப்படுகிறது.

www.padippakam.com



## தலைப்புகள்

நீலாவணனின் வாழ்வும் இலக்கியமும் என்ற தலைப்பில் அமையும் இக்கட்டுரை கீழ்வரும் தலையங்களின் கீழ் அமைந்துள்ளது.

(1) நீலாவணன் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள்.
(2) அவர் காலத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள்.
(3) இலக்கியத்தில் அவர் ஈடுபாடு காட்டிய துறைகள்.
(4) எழுத்தினூடாக நீலாவணனைப் புரிந்து கொள்ளல்.
(5) வேளாண்மையும் நீலாவணனும்
(6) நீலாவணன் தனித்துவங்கள்
(7) நீலாவணன் பற்றிய விமர்சனம்
(8) ஈழத்து இலக்கிய உலகில் நீலாவணனின் ஸ்தானம்.

# நீலாவணனின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு

நீலாவணன் பிறந்த பெரிய நீலாவணைக் கிராமம் மட்டக்களப்பின் தென் திசையில் உள்ளது. இது மட்டக்களப்பிலிருந்து 20 மைல் தொலைவிலும், கல்முனையிலிருந்து வட திசையில் 5 மைல் தொலைவிலும் அமைந்துள்ளது. நீலாவணனின் தந்தையார் கேசகப்பிள்ளை தாயார் தங்கம்மா. கேசகப்பிள்ளை சித்த ஆயுள்வேத வைத்தியர் சாஸ்திரம், மந்திரம் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டவர். தாயாரும் இலக்கியப் பறிச்சயம் மிக்கவர். அம்மானை, பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதைகளில் ஈடுபாடு கொண்டவர். தந்தையாரிடம் பண்டைய இலக்கியங்கள், ஏட்டுச் சுவடிகள் இருந்தன. தங்கம்மாவின் அப்பாவும் (நீலாவணன் பாட்டன்) சட்டம்பியாகவும்,

www.padippakam.com



பிஸ்கால் அதிகாரியாகவும் கடமையாற்றியவர். சாஸ் திரம், வைத்தியம் கைவந்தவர். இளமையிலேயே தாய். தந்தை. தாய்வழி மாமன்மார் பாட்டனாரின் செல்வாக் கினால் மரபு வழி இலக்கியங்களை அறிவதுடன் ஏடுகளைப் படிக்கும் வாய்ப்பும் நீலாவணனுக்கு அமைந் திருந்தது பின்னாளில் கவிதை இயற்றுவதற்கான அடித் தளம் இளமையிலே நீலாவணனுக்கு இவ்வாறு கிடைத்தது.

மூன்று தங்கைமாரையும், 3 தம்பிமாரையும் கொண்ட நீலாவணன் குடும்பத்தில் நீலாவணன் மூத்தவர். குடும்பம் பெரிய குடும்பம்.

மட்டக்களப்பில் கிராமங்களில் ஒன்று பெரிய நீலாவணை. கிராமங்களுக்குரிய சாதி அதிகார அடுக்கு முறைமை (Hierarchy) கொண்ட கிராமம். கிராமத்தின் பிரதான தொழில் விவசாயம், மரக்கறிச் செய்கை விஷ்ணு கோயிலும், பேய்ச்சி அம்மன் கோயிலும் பிரதான கோயில்கள். விஷ்ணுகோயில் தாதன் கட்டிய கோயில் என்பது ஐதீகம்.

இளமையில் கோயில், விவசாயம், வீட்டுப் ' பின்னணி என்பன நீலாவணனின் ஆளுமை உருவாகத் துணை புரிந்தன. குடும்பத்தினர் தாராளமனம் கொண்டவர்கள். அதனால் கிராமத்தின் சகல மட்டத்தினருடனும் பழகும் வாய்ப்பு இளமையிலிருந்தே நீலாவணனுக்கு வாய்த்தது. குறைந்த வகுப்பினராகக் கருதப்பட்ட சிலர் இளமைக் காலத்தில் நீலாவணனின் மிக நெருக்கமான நண்பர்களா யிருந்துள்ளனர்.

தன்னுடைய இளமைக்காலக் கல்வியை நீலாவணை யின் அயற்கிராமமா மருதமுனை அல்மனார் மகா வித்தியாலயத்திற் பெற்றார் இது ஒரு முஸ்லிம் கல்லூரி. அங்கு அன்றைய எஸ். எஸ். சீ. வரை (S. S. C.) படித்தார்

படிப்பகம்

கவிமணி அல்ஹாஜ் சரிபுதீன் அவர்களின் தலைமாணாக்கன் என்று அங்கு பேர் எடுத்தார். சரிபுதீன் அவர்கள் விபுலானந்தரின் தலைமாணாக்கருள் ஒருவர். இவ்வகையில் நீலாவணன் விபுலநந்தரின் மாணவ பரம்பரையினரானார். சரிபுதீன் மரபுவழிக் கவிஞர். வெண்பாவில் வல்லுனர். நீலாவணனின் கவிதா வளர்ச்சியில் இவர் செல்வாக்குமுண்டு. சரிபுதீன் நீலாவணனை தனது மகன் என்றே அழைத்தார். மருதமுனை அயற்கிராமமானபடியினாலும், அங்கு படித்தபடியினாலும் முஸ்லிம் மக்களின் தொடர்பும், நட்பும் இவருக்கு இளமையிலிருந்தே ஏற்பட்டது.

பாடசாலையில் தேறிய பின்னர் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி நெறியை மேற்கொண்டார். அங்கு பண்டிதர் வி. சி. கந்தையா, பண்டிதர் பூபாலபிள்ளை ஆகியோரின் மாணாக்கரானார். பண்டிதர் பூபாலபிள்ளையின் நெருக்கமான மாணவர். பூபாலபிள்ளையவர்கள் மரபுப்பிடிப்பும், அஞ்சா நெஞ்சம் கொண்ட ஒரு பண்டிதர்.

1954, 55ஆம் ஆண்டுகளில் கொழும்பு கொம்பனித் தெரு அரசினர் பாடசாலையில் நீலாவணன் கடமை புரிந்தார். அதன் பின் சொந்த ஊருக்கு மாற்றலாகி வந்து ஊரிலும் ஊரைச் சுற்றியுள்ள வேம்படித் திடல், துறை நீலாவணை, பெரிய நீலாவணை வடக்கு, சேனைக்குடியிருப்பு ஆகிய கிராமங்களில் அமைந்திருந்த அரசினர் தமிழ்க் கலவன் கனிஷ்ட பாடசாலைகளிலும் பணி புரிந்தார். பெரும்பாலான இவரது வாழ்க்கை தமிழ் ஆசிரியர் சூழலிலும், கிராமத்திலும், கனிஷ்ட மாணாக்கர் மத்தியிலும் கழிந்தது.

தனது 20ஆவது வயதில் அரசியல் துறையில் ஓரளவு டுபாடு கொண்டுழைத்தார். தீவிர தமிழ்ப்பற்று மிக்க

www.padippakam.com



வராகத் திகழ்ந்தார். திராவிடக்கழக, திராவிட முன்னேற்றக்கழகச் சீர்திருத்த கருத்துக்களால் இளமையிற் கவரப்பட்டிருந்தார், அண்ணாத்துரை, கருணாநிதி, பாரதிதாசன் எழுத்துக்களை விரும்பி வாசித்தார். அக்கால கட்டத்தில் தமிழர் மத்தியில் பிரபல்யம் பெற்று விளங்கிய தமிழரசுக் கட்சியை ஆதரித்தார். தமிழரசுக் கட்சி கல்முனையில் நடத்திய மாநாட்டில் கவியரங்கிற்குத் தலைமை தாங்கினார். தமிழரசுக் கட்சித் தலைவரான எஸ். ஜே. வி. செல்வநாயகம், அமிர்தலிங்கம் ஆகியோருடன் நேரடி நட்பும் பரிச்சயமும் கொண்டார். இக்கால கட்டத்தில் கட்சி ஏடான சுதந்திரனுக்குக் கவிதைகள் எழுதினார். அரசியல்சார்பு துண்டுப்பிரசுரங்களும் எழுதினார்.

1960களில் கல்முனையைத் தளமாகக் கொண்டு இவர் இலக்கிய இயக்கங்களில் ஈடுபட்டார். மருதமுனையிலிருந்து மருதூர்க்கொத்தன், மருதூர்க்கனி, மசூர் மௌலானா, பாண்டிருப்பிலிருந்து பாண்டியூரான், சம்மாந்துறையிலிருந்து பஸீல் காரியப்பர் ஈழமேகம் பக்கீர் தம்பி போன்றோர் எழுத்தாள நண்பர்களாயினர். 60களில் ஈழத்து இலக்கிய உலகில் இலக்கியக் கோட்பாடுகள் முட்டி மோதலாயின. முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தேசிய இலக்கியம், மண்வளம் என்ற கோஷங்களை முன்வைத்து யதார்த்த இலக்கிய வாதத்தைத் தங்கள் கொள்கையெனப் பிரகடனம் பண்ணியது. அப்போக்கினை எதிர்த்து ஸ்தாபன ரீதியாக எஸ். பொன்னுத்துரை நற்போக்கு இலக்கிய கோஷத்தை முன்வைத்தார். நீலாவணன் தன்னை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் எதிரணியில் இனம் காட்டினார். ஒரு வகையில் தீவிர முற்போக்கு எழுத்தாளர் சங்க எதிர்ப்பாளராகவும் விளங்கினார். இவ்வகையில் எஸ். பொ, எம். ஏ. ரஹ்மான், கனக. செந்திநாதன், வி. கந்தவனம், மு. தளையசிங்கம்,

www.padippakam.com



ஏ. ஜெ. கனகரத்தினா, மகாகவி, அண்ணல், வ. அ. இராசரத்தினம், ராஜபாரதி, அருள் செல்வநாயகம், வரதர், எஸ். டி, சிவநாயகம், திமிலைத்துமிலன், மண்டூர் சோமசுந்தரம், பரமஹம்சதாசன் போன்றோரின் நெருக்கமான எழுத்துலகத் தொடர்புகள் கிடைத்தன. பின்னாளில் எஸ். பொ., அண்ணல் ஆகியோருடன் இலக்கிய முறிவு ஏற்பட்டது. (பின்னாளில் சிலருடன் மீண்டும் நட்பு) முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை எதிர்த்தாலும் முற்போக்கு எழுத்தாளர்களின் தொடர்பும் இவருக்கிருந்தது. சில்லையூர் செல்வராசன், முருகையன், டானியல், டொமினிக்ஜீவா, அகஸ்தியர், தெனியான், சிவத்தம்பி போன்றோரின் தொடர்புகளும் இருந்தன.

60களில் நீலாவணனின் அரவணைப்பில் கல்முனையில் ஓர் இலக்கியப் பட்டாளம் உருவானது. கொத்தன் மருதூர்க்கனி, அன்பு முகைதீன், எம். ஏ. நுஃமான் வி. ஆனந்தன், கல்முனைப் பூபால், பாலமுனை பாறூக், மருதூர் வாணன், மு. சடாட்சரன், சத்தியன், முல்லை வீரக்குட்டி, சுனகசூரியம் என்போர் நீலாவணனால் ஆரம்ப உரு அமைக்கப்பட்டவர்களே. 60களில் நீலாவணன் நாடகத் துறையில் ஈடுபாடு காட்டினார். மழைக்கை என்ற கவிதை நாடகத்தை எழுதி மேடையேற்றினார். கர்ணனை நாயகனாகக் கொண்ட இந்நாடகத்தில் அவர் குந்திதேவி பாகம் தாங்கி நடித்தார். எம்.ஏ. நுஃமான் இந்திரனாகவும் மருதூர்க் கொத்தன் கிருஷ்ணனாகவும் இதில் நடித்தமை குறிப்பிடத்தக்கது. இக்காலகட்டத்தில் இலங்கையர் கோனின் தொடர்பு இவருக்கேற்பட்டது. இலங்கையர் கோன் அப்போது கல்முனையில் பிரிவுக் காரியதிகாரியாக (டி ஆர் ஓ) கடமையாற்றினார். இலங்கையர்கோன் இவரை நன்கு கவர்ந்திருந்தார். இத்தொடர்பு இவரின் இலக்கியப் பார்வையை மேலும் அகலித்திருக்கக்கூடும். ஆங்கிலக் கவிதைகளையும், இலக்கியங்களையும் அறிமுக

படிப்பகம்

www.padippakam.com



மாக்கிக் கொண்ட வாய்ப்பு அது. இதேபோல இவரது இலக்கிய அகலிப்பிற்குக் காரணமாக இன்னுமொருவர் உண்டு அவரே டாக்டர் ம. முருகேசப்பிள்ளை. ஆழமான வாசகரும் விமர்சகருமான இவர் மேனாட்டு இலக்கியப் பரிச்சயமுடையவர் திரு. அருளையா அவர்களும் இவர்களோடு குறிப்பிடத்தக்கவர். இம்மூவரின் தொடர்பு நீலாவணனின் இலக்கிய சிந்தனையைப் பாதித்தது.

நீலாவணையின் அயற்கிராமமான மருதமுனைக் கிராம முஸ்லிம் மக்கள், வாழிடம் தேடி நீலாவணைக் கடற்கரைப் பகுதியில் குடியேறிய காலை நீலாவணை மருதமுனைச் சண்டை தொடங்கியது. தமிழ் முஸ்லிம் இனக்கலவரமாக அது வெளிப்பட்டது. இக்காலகட்டங்களில் நீலாவணையில் ஏனைய பகுதியின் அத்துமீறிக் குடியேறுவதைத் தடுப்பதில் முன்நின்றார்.

மட்டக்களப்புப் பிரதேசப் பற்றுமிக்கவராக விளங்கினார். மட்டக்களப்பின் பெருமைகளைக் கூறுவதில் மகிழ்ந்தார். தன் கிராமத்தை முன்னேற்றப் பாடுபட்டார். கோயில் மீது பற்றில்லாவிடினும் தன்னூரின் பழைய கோயிலான விஷ்ணு கோயிலைக் கட்டி கும்பாபிசேகம் செய்ய முயற்சிகளை மேற்கொண்டார். ஊரிலுள்ள மாணாக்கரை வைத்து ஊரை அழகுபடுத்த சிரமதானங்கள் புரிந்தார். ஊரிலே சீர்திருத்தங்களை மேற்கொண்டபோது ஊரின் பெரிய புள்ளிகளான போடிமார், கூப்பன் கடை மனேஜர், கோயில் தர்மகர்த்தா ஆகியோரின் எதிர்ப்புக்குள்ளானார். அவர்களின் பரம எதிரியாகவே திகழ்ந்தார். தன்னைச்சூழ நடைபெறும் பொய்மையையும், போலித்தனங்களையும் ஈவு இரக்கமின்றிச் சாடினார்.

நீலாவணையில் போடிமாருக்கும் சீலைவெளுப்போருக்குமிடையே பெரும் சண்டையொன்று உருவானது.

www.padippakam.com


இறந்த வீட்டுக்கு வண்ணார்பறை எடுப்பதை ஊர்ப் போடிமார் அனுமதிக்கவில்லை. அப்பிரச்சினை சண்டையாக உருவெடுத்தபோது நீலாவணன் சேலை வெளுப்போர் பக்கம் நின்றார்.

கோவிலிலே நிர்வாகத்தின் குறைபாடுகளை எடுத்துக் கூறுவதில் முன்நின்றார். இதனால் இளைஞர்களின் ஆதரவுக்கும், முதியவர்களின் எதிர்ப்புக்கும் உரியவரானார். கல்முனையில் வாழ்ந்த தமிழ் முஸ்லிம் எழுத்தாளர்களை ஒருங்கு திரட்டி கல்முனைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் 1960ல் அமைக்கப்பட்டபோது நீலாவணன் அதன் தலைவரானார். தமிழ் எழுத்தாளர் என்ற சொற்றொடர்ப் பிரயோகத்திற்குச் சிலர் தவறான விளக்கம் தர முற்பட்டபோதும் தமிழில் எழுதும் எழுத்தாளர் அனைவரும் தமிழ் எழுத்தாளர்களே என நீலாவணன் விளக்கமளித்தார். கல்முனைப் பகுதியில் வாழ்ந்த குறிப்பிடத்தக்க தமிழ்-முஸ்லிம் எழுத்தாளர்கள் இச்சங்கத்தில் அங்கத்தவர்களாயிருந்து நீலாவணன் தலைமையில் இயங்கினார்.

சண்முகம் சிவலிங்கம், மு. சடாட்சரன், நுஃமான், மருதூர்க்கனி, மருதூர்க் கொத்தன் ஆகியோர் இச்சங்கத்தின் முக்கிய பங்காற்றினர்.

1967இல் பாடும்மீன் என்றொரு கலை இலக்கியத் திங்கள் இதழைக் கொணர்ந்தார். நீலாவணனே இதன் ஆசிரியருமாவார். 2 இதழ்களே வெளிவந்தன.

1970களில் சண்முகம் சிவலிங்கம், நுஃமான், மருதூர்க்கனி, மருதூர்க்கொத்தன் ஆகியோருடன் இலக்கிக் கோட்பாடு காரணமாப் பிரிவினை ஏற்பட்டது. எனினும் நுஃமான் சண்முகம் சிவலிங்கம் இருவரும் இணைந்து வெளியிட்ட கவிஞன் கவிதைச் சஞ்சிகைக்குத் தொடர்ந்து எழுதினார். பாவம் வாத்தியார் என்ற

படிப்பகம்

www.padippakam.com



அவரது புகழ்பெற்ற கவிதை கவிஞன் சஞ்சிகை ஒன்றில் வெளிவந்தது பாவம் வாத்தியாரில் வரும் வாத்தியாரின் அனுபவங்கள் நீலாவணன் வாழ்க்கையிற்பெற்ற சமூக அனுபவங்களே வாத்தியராக வாழ்ந்து கொண்டிருந்த கவிஞர் நீலாவணன் அவர்கள் 1974இல் காலமானார்.

# அவர் காலத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள்

உலக அரங்கிலே 2ஆம் உலக மகாயுத்தம் முடிந்த பின்னர் சோஷலிச நாடுகள் தோற்றம் பெற்றமை நீலாவணன் வாழ்ந்த காலத்திலேதான் நிகழ்ந்தது. முக்கியமாக ருஷ்யா, சீனா ஆகிய இரண்டு பெரும் சோஷலிச நாடுகள் உருவாகின. பொது உடமைக் கருத்துக்கள் உலகின் ஒடுக்கப்பட்ட நாடுகளையும், மக்களையும் ஆகர்சிக்கத் தொடங்கிய காலம் அது.

தென்னாசிய அரங்கிலே சுதந்திரப் போர் நடத்திய இந்தியா வெள்ளையரிடமிருந்து கத்தியின்றி ரத்தமின்றி அறப்போர் செய்து சுதந்திரம் பெற்ற காலம். பின்னாளில் பெரியார் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் தலைமையில் திராவிடக் கழகம் தோற்றுவிக்கப்பட்டு அதினின்றும் அண்ணாதுரை பிரிந்து தி.மு.க. உருவான காலம் இது. வடவர் ஆதிக்கம், ஆரியர் செல்வாக்கு, பிராமணியத் தாக்கத்திற்கு எதிராக தி.மு.க. குரல் தந்தது. கம்பராமாயணம், பெரிய புராணத்திற்கு மாற்றாக சிலப்பதிகாரம், திருக்குறள் என்பன முன்வைக்கப்பட்டன. அண்ணாதுரை, கருணாநிதி ஆகியோரின் சீர்திருத்தக் கருத்துக்களும், பகுத்தறிவு வாதக் கொள்கைகளும் தமிழ் இளைஞர்களைத் தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் கவர்ந்த காலம் அது.

நீலாவணனுக்கு 17 வயதாயிருக்கும்போதுதான் பிரிட்டிஸாரிடமிருந்து, இந்தியாவைப்போல இலங்கையும்

படிப்பகம்

www.padippakam.com



சுதந்திரம் பெறுகின்றது. 1950 ஆம் ஆண்டில் இலங்கை வரலாற்றில் முக்கியமான காலப்பிரிவாகும் (அப்போது நீலாவணனுக்கு வயது 20) கிடைத்த சுதந்திரத்தை அர்த்தமுள்ளதாக்குவதற்கான முயற்சிகளும் போராட்டங்களும் இக்காலப் பகுதியிற் தொடங்கின. தேசியம் பற்றிய பிரக்ஞை பொது மக்கள் மத்தியில் பிரபல்யமாகத் தொடங்கிய காலப்பிரிவும் இதுவே. தேசிய இனப் பிரச்சினை பெரிய அரசியல் பிரச்சினையாக மாறிய காலமும் இதுவே. சிங்கள-தமிழ் தேசிய வாதங்கள் பால் இந்நாட்டு இளைஞர் பலர் ஈர்க்கப்பட்டனர். தமிழ்த் தேசியவாதத்தினை முன்வைக்கும் பிரதான கட்சியாகச் சமஷ்டிக் கட்சி உருவானது. அதன் கட்சி ஏடாகச் சுதந்திரன் வெளிவந்தது.

சிங்களத் தேசிய வாதத்தினை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதிநிதித்துவம் செய்தது. ஐக்கிய தேசியக் கட்சியை வென்று பண்டாரநாயகா தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தது. சிங்களம் ஆட்சி மொழியானது. அதை எதிர்த்துத் தமிழரசுக்கட்சி அகிம்சைப் போராட்டம் நடத்தியது. சத்தியாக்கிரகம் அதன் ஆயுதமானது. கச்சேரிகளை ஸ்தம்பிக்கச் செய்யும் மறியற் போராட்டம் நடைபெற்றது. இதனால் இனக் கலவரங்கள் உருவாகின. தமிழர், சிங்களவர் மோதல் உருவானது. தமிழர் தலைவர்களெனக் கருதப்பட்ட அமிர்தலிங்கம், வன்னியசிங்கம், செல்வநாயகம் முதலியோர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

1970களில் மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் உதவியுடன் மீண்டும் பதவிக்கு வந்தது. இலங்கை சோஷலிசக் குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டது. புதிதாக உருவாக்கப்பட்ட அரசியற் திட்டத்தில் தமிழ் மக்களுக்குரிய உரிமை போதாதென்று தமிழரசுக்கட்சி மீண்டும் போராட்டம் தொடங்கியது. பிற்காலத்தில்

www.padippakam.com



தனித் தமிழ்ப் பிரதேசம் கோரிப் போராடிய இயக்கங்களாக வளர்ந்த இயக்கங்களை உள்ளடக்கிய மாணவர் பேரவை உருவானது.

1960 களிலிருந்து அமுல் நடாத்தப்பட்ட சில கொள்கைகள் இலங்கைச் சமூக வாழ்வில் பல பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தன. இலவசக்கல்வி, நெற்கானிச்சட்ட மசோதா, சுயதொழிலில் உயர்கல்வி தேசியமயமாக்கம், பாடசாலை அரசாங்க மயமாக்கல் கலப்புப் பொருளாதாரக் கொள்கை என்பன இச்சமூக மாற்றத்தின் காரணிகளாயின. இக்கொள்கைகளைத் தமிழரசுக் கட்சி எதிர்த்தது.

1969இல் வட பகுதியிலே தீண்டாமைக்கு எதிரான பெரும் போர் நடைபெற்றது. தாழ்த்தப்பட்ட மக்கள் தம்மைக் கோயிலுக்குள் புகவிடும் உரிமை கேட்டுப் பெரும் போரொன்றை நடத்தினர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சீனசார்பு இதற்கு ஆதரவு நல்கியது.

ஈழத்து இலக்கிய உலகிலே ஈழத்து இலக்கியம் என்ற கோஷம் அனைத்து எழுத்தாளர்களாலும் முன்வைக்கப்பட்டது. 50களில் பகீரதன் இங்கு வந்தபோது ஈழத்து இலக்கியம் இந்தியத் தமிழ் இலக்கியத்தைவிட பத்து வருடம் பின்தங்கியது என்று சொன்ன கூற்று இங்குள்ள எழுத்தாளர்களைத் தட்டி எழுப்பியது. ஈழத்து இலக்கிய அறிஞர்கள் இனம் காணப்பட்டனர், கௌரவிக்கப்பட்டனர்.

ஈழத்து இலக்கியக் கோஷத்தை முன் எடுத்த எழுத்தாளர்கள் இலக்கிய கோட்பாடு காரணமாக இரண்டாகப் பிரிந்தனர். ஒன்று முற்போக்கு எழுத்தாளர் மற்றது முற்போக்கு அல்லாத எழுத்தாளர். முற்போக்கு எழுத்தாளர்கள் தமது இலக்கிய இயக்கத்தை தேசிய ரீதியாக முன்னெடுத்தனர். சமூகப் பிரச்சினைகள் மக்கள் போராட்டங்களை உள்ளடக்கியதான யதார்த்த

www.padippakam.com



இலக்கியக் கோட்பாட்டினை அவர்கள் முன்வைத்தனர். இளைஞர் பலர் இதன்பால் ஈர்க்கப்பட்டனர்.

சுதந்திரன், கலைச்செல்வி போன்ற பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் ஈழத்து இலக்கியம் வளர உதவின. கைலாசபதி தினகரன் ஆசிரியரானபோது [1959, 60] பிரக்ஞை பூர்வமாக திட்டமிட்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம் வளர தினகரன் இடம் கொடுத்தது. அதன் பின்பும் அம்முயற்சி தொடர்ந்தது. மல்லிகை முற்போக்கு இதழ் என்ற மகுடத்துடன் வெளியாயிற்று. இவை தவிர தேனருவி, தமிழின்பம், வசந்தம். மரகதம், இளம்பறை போன்ற இலக்கிய மாத இதழ்களும் வெளியாயின.

1970க்குப் பின்னர் சுமார் 7 ஆண்டுகாலம் இந்தியப் புத்தகங்கள் சஞ்சிகைகளின் இறக்குமதிக்கு இருந்த தடையைப்பயன்படுத்தி இங்கு பல நூல்கள்வெளிவந்தன.

இத்தகைய சமூக, அரசியல் வரலாற்றுப் பின்னணியிலேதான் நீலாவணன் பிறந்து வளர்ந்தார்; வாழ்ந்தார். எழுத்தாளனைச் சூழ நிகழும் நிகழ்வுகள் அவனைப் பாதிக்கும் இப்பாதிப்புகள் எழுத்தாளனில் பிரதிபலிக்கும். அந்நிகழ்வுகளை, பிரச்சினைகளை நுண்மான் நுழைபுலம் மிக்க எழுத்தாளன் உள்வாங்கி பின் வெளிவிடுவான். உள்வாங்கி வெளிவிடும் முறையில் எழுத்தாளனின் பின்னணி அறிவு, அனுபவம், ஆளுமை என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. தன்காலத்தைச் சரியான முறையில் வெளிப்படுத்தி தீர்க்க தரிசனமான விடயங்களையும் சொல்லக்கூடிய தீட்சண்ய அறிவுமிக்க புலவன் மகாகவிஞனாகிறான். மகாகவிஞன் பற்றி கவிஞரும், விமர்சகருமான (Tomlemson) பின்வருமாறு கூறுகிறார்.

> ''நாம் இன்றுள்ள நிலைமை பற்றிய தீர்க்கமான படிமத்தையும் நாம் எய்த விரும்பும் அல்லது எய்தக் கூடிய நிலைமை பற்றிய தீர்க்கதரிசனமான படிமத்தையும் உண்மையான மகாகவிகள் நமக்குத் தருகின்றனர்''

www.padippakam.com



இக்கூற்றின் பின்னணியில் கவிஞனான நீலாவணனை இனம் காணுவதும் மதிப்பிடுவதும் அவசியமாகும். அவரை இனம் கண்டு மதிப்பிடுவதன் முன் அவர் இலக்கியத்தில் ஈடுபாடு காட்டிய துறைகளை அறிதல் மிக அவசியமானதாகும்.

# நீலாவணன் இலக்கியத்தில் ஈடுபாடு காட்டிய துறைகள்

நீலாவணன் இலக்கியத்தில் கதை, கவிதை, சிறு காவியம், நாடகம், உருவகக் கதை, விருத்தாந்த சித்திரம், கட்டுரைகள், இசைப்பாடல்கள், குழந்தைக் கவிதைகள் ஆகிய துறைகளில் எழுதியுள்ளார்.

## கவிதைகள்

நீலாவணன் பெருமளவில் எழுதியவை சிறுகவிதைகளே. இக்கவிதைகளை அவர் மானாபரணன், கொழுவு துறட்டி, கே. சி. நீலாவணன், நீலாவணன், நீலவண்ணன், எறிகுண்டுக் கவிராயர், சின்னான் கவிராயர், இராமபாணம், எழில் காந்தன், என்ற பெயர்களில் எழுதியுள்ளார். இவரது முதற்கவிதை 1948ஆம் ஆண்டிலே தினகரன் பாலர் கழகத்தில் பிரசுரமானது.

கே. சி. நீலாவணன் என்ற பெயரில் சுதந்திரனில் 1953 இல் எழுதிய கவிதை தொடக்கம் அவர் கடைசியாக எழுதியதாகக் கொள்ளப்படும். "பொய்மை பொசுங்கிற்று" என்ற கவிதை வரை எடுத்து நோக்கின் அவர் கவிதைப் பொருளாகப் பின்வருவன அமைந்துள்ளமையைக் காணலாம் தமிழுணர்வு, தமிழர் அரசியல், காதல், இயற்கை, மனோரதியக் கற்பனைகள், குறியீடு, பழமை நோக்கு, ஆன்மீகம், புதுமை வேட்கை, சமூகப் பிரச்சினை.



படிப்பகம்

www.padippakam.com



அரசியற் கவிதைகளையும், தன்னை இனம்காட்டிக் கொள்ளாத கவிதைகளையும் எழுதும்போது நீலாவணன் என்ற பெயரை அவர் கையாளவில்லை. எழில்காந்தன், எறிகுண்டுக் கவிராயர், இராமபாணம், சின்னான் கவிராயர், மானாபரணன், கொழுவுதுறட்டி ஆகிய பெயர்களில் எழுதினார்.

இந்தக் கவிதைகளை எழுத அவர் மரபு வழிப்பா வடிவங்களையே கையாண்டார். விருத்தப்பா, வெண்பா, அகவல்பா, கலிவெண்பா, சிந்து இசைப்பா என்பன இவரால் கையாளப்பட்ட யாப்பு வடிவங்களாகும். மரபு வழிக் கவிதையில் பற்றும் பாசமும் மிக்கவர் நீலாவணன். இம்மரபு வழி எழும் நெடும் கவிதையில் வரும் பெரியவரான அறவழிப்புலவர் கருத்துக்கள் நீலாவணன் கருத்துக்களே. அதில் புதுமைவாணன் புதுக்கவிதையின் பிரதிநிதி. புதுமைவாணனின் புதுக்கவிதைக் கருத்துக்களுக்கு அறவழிப்புலவன் தரும் பதிலிலிருந்து நீலாவணன் பண்டைய யாப்பில் கொண்டிருந்த பற்றுப் புலனாகிறது. தன் நண்பரான கவிஞர் அண்ணல் வெண்பாவிற் பிழை விட்டபோது நட்பைப்பேணாது வெண்பாவைப் பேணி அண்ணலைச் சாடும் அளவுக்குச் சென்றவர் நீலாவணன் (இதன் விபரம் பின்னால் தரப்படுகிறது)

சங்க இலக்கிய மரபில் ஈடுபாடு கொண்ட நீலாவணன் சங்கப் புலவர்கள் போலப் பாடலும் இயற்றியுள்ளார். [இதுவும் பின்னால் கூறப்படுகிறது] ஆரம்பத்தில் கவிதையில் பாரதிதாசனின் பெரும் செல்வாக்கிற்கு உற்பட்டவராகக் காணப்படுகிறார். தமிழையும் காதலையும் பாடுவதில் பாரதிதாசன் போன்றே செயற்படுகிறார். பின்னாளில் இந்த அலையினின்று விடுபட்டுப் புதுவழி கண்டுகொள்கிறார். வெண்பாவை, கலிவெண்பாவை, ஏன் விருத்தப்பாவைக்கூட அச்சுக்கும், கண்ணுக்கும் ஏற்ற வகையில் மரபு கெடாமல் அடிகளைக் கூட்டி எழுது

www.padippakam.com



கிறார். உதாரணம்; ஒரு வெண்பா கீழ் வருமாறு அச்சிடப்பட்டுள்ளது.

தோடப்பழச் சுடை போல் தொங்கும்
நிலவொளியில்
ஆட வருவாயென்[று] ஆற்றோரம்
ஓடத்தே
நான் காத்திருந்தேன் நடுச்சாமம் ஆகு மட்டும்
ஏன் காக்க வைத்தாய் எனை.

அவரது பிற்காலக் கவிதைகளிற் ஆரம்பக்காலக் கவிதைகளிற் காணப்படாத சொல்வளமும், கவித்துவமும் புலப்படுகின்றன. கவிதையூடே அவரின் இலக்கிய வளர்ச்சி தெரிகிறது.

## பா நாடகம்

நீலாவணன் மூன்று பா நாடகங்களை எழுதியுள்ளார். ஒன்று மணக்கண். இது 4-6-63 தொடக்கம் தினகரன் வாரமலரில் 4 வாரங்கள் தொடராக வெளியாகியுள்ளது. இன்னொன்று மழைக்கை. இது 5-1-64 தொடக்கம் வீரகேசரி வாரமலரில் தொடராக வெளிவந்துள்ளது. மற்றது சிலம்பு. இது பாடசாலை மாணாக்கரைக் கொண்டு நடிப்பிக்கப்பட்டது. மூன்றுமே அகவற் பாக் கலாலமைந்த பா நாடகங்கள். இவை தவிர கொங்கண முனிவர் பற்றிய மரபுக்கதை ஒன்றை அடிப்படையாகக் கொண்ட வேறுமொரு பா நாடகம் எழுதியுள்ளார் எனவும், அந்த வானொலி நாடகத்தில் கவிஞர் முருகையன் நடித்ததாகவும் அறிகிறோம்.

மனக்கண் காதலைக் கருப்பொருளாகக் கொண்ட நாடகமாகும். தாய்நாட்டின் மானம் காக்க முனையும் துறைவன், தாய்நாட்டுக்காகப் போரிடுபவனுக்கு தன் கண்ணை வழங்கி உயிர்விடும் காக்கை வண்ணன். வீரத்திற்காக துறைவன் பக்கமும். தியாகத்திற்காக காக்கை

www.padippakam.com



வண்ணன் பாலும் ஈடாடும் நெஞ்சம் கொண்ட இனியாள் என்போரையும் வாணி என்ற தோழியையும் பாத்திரமாகக் கொண்டது இந்நாடகம்.

துறைவனும் இனியாளும் கண்டவுடன் காதல் கொள்வதும், காதல் உருவாகுமுன்னரேயே இனியாளின் கையை துறைவன் பற்றுவதும் போர் முரசும் உடனே கேட்பதும் ''போர் முரசம் முழங்குதோ'' என்று இனியாள் கேட்க, துறைவன் ''போகுமுன்னர் பொறித்திடுக அன்பே ஓர் ஆசை முத்தம்'' என்று கேட்டதும் இந்நாடகத்தின் இயல்பின்மைக்கு உதாரணங்களாகும். நாடகத்திற்கான கட்டிறுக்கம் இதில் அறவேயில்லை. பாரதிதாசன் பா நாடகங்களை இக்காவியம் கருவிலும், உருவிலும் நினைவூட்டுகிறது.

இந்நாடகத்தை இலங்கையர்கோன் படித்துப் பார்த்துப் பல இடங்களில் வெட்டித் திருத்தம் செய்த பின் ''தான் திருத்தத்தை ஏற்றுக் கொள்வின் இந்நாடகம் அருமையான இலக்கிய நாடகமாக அமையுமென்று எழுதியதாக நீலாவணன் நானும் இலங்கையர் கோனும் என்ற கட்டுரையில் எழுதியுள்ளார். தினகரனில் வெளி வந்த மனக்கண் இலங்கையர் கோன் கைபட்ட மனக் கண்ணா அல்லவா என்பது தெரியவில்லை, எனினும் அது ஒரு சாதாரண நாடகமாகவே அமைந்துள்ளது.

மழைக்கை இதினின்று சற்று மாறுபட்டுக் காணப் படுகிறது. மகாபாரதத்தில் கர்ணனின் கடைசி நாட்களே நாடகத்தின் கரு. கருணன், கண்ணன், குந்தி இந்திரன், வாயிற் காவலன் ஆகிய பாத்திரங்களுக்கூடாக நாடகம் செல்கிறது. மகாபாரதக் கதைக் கருவை அப்படியே நாடகமாக்க முயன்றுள்ளார் ஆசிரியர். கண்ணன் கருணனுக்கு அவன் பிறப்பைக் கூறுவதும், இந்திரன் வேலைக் கொடுத்த பின்னர் கருணனிடம் அதனைத் தன் மகன் மேல் ஏவாமல், வீமன் மகனான கடோர்க்கஜன் மீது ஏவச்

www.padippakam.com



சொல்வதும் புதிய செய்திகள். இதுவும் ஒரு சாதாரண நாடகமாகவே அமைந்துள்ளது. நாடகத்துக்குரிய கட்டிறுக்கம், முரண், பாத்திர வார்ப்பு என்பன இவ்விரு நாடகங்களிலும் பேணப்படவில்லை.

சிலம்பு என் பார்வைக்குக் கிடைக்கவில்லை,

## சிறுகாவியம்

மூன்று சிறு காவியங்களை நீலாவணன் எழுதியுள்ளார். ஒன்று பட்டமரம். இது வெண்பா யாப்பில் அமைந்தது. சுதந்திரனில் 17-12-1957 இல் வெளிவந்தது. மற்றது வழி என்னும் சிறு காவியம். இது தினகரனில் 1963ஆம் ஆண்டு வெளிவந்தது. மூன்றாவது காவியம் வேளாண்மையாகும். வ. அ. இராசரத்தினம் தங்கம் வெளியீடாக இதனை 1982இல் வெளியிட்டுள்ளார். முழுமை பெறாத காவியம் இது. நீலாவணன் எழுத விரும்பிய பெரிய காவியத்தின் முதற்பகுதி என்றும், அல்ல தன்னளவில் முற்றுப்பெற்ற காவியமென்றும் இக்காவியம் பற்றி இருவேறு கருத்துக்கள் நீலாவணனின் நண்பர்களிடையே நிலவுகின்றது.

பட்டமரம் பண்ணையார் மகளுக்கும் கணக்கப்பிள்ளைக்கும் ஏற்பட்ட காதலையும் காதல் கொலையிலும் தற்கொலையிலும் முடிவதையும் காட்டும் நெடுங்கவிதை இது.

வழி தினகரனில் நடைபெற்ற இலக்கியப் பரிசோதனைக்களத்திற்கென நீலாவணனால் எழுதப்பட்ட குறுங்காவியமாகும். பழமை வழி நிற்கும் அறவழிப் புலவனுக்கும் புதுமை வழி நிற்கும் புதுமைப் புலவனுக்கும் நடக்கும் வாதமாக அமையும் இக்காவியத்தில் நீலாவணன் பழமை பேணும் அறவழிப் புலவன் பக்கம் நிற்கிறார்.

வேளாண்மை நீலாவணன் கவிதா முதிர்வு பெற்ற காலத்தில் எழுதப்பட்ட காவியமாகும். ஒரு சிறு காதல்

படிப்பகம்

www.padippakam.com



கதையைக் கருவாகக் கொண்டு மட்டக்களப்பில் ஒரு குழு வினரிடையே வழக்கில் இருந்த பண்பாடு, பழக்கவழக்கம் வாழ்க்கை முறைகளைக் கவிதையூடு கொண்டுவர நீலாவணன் எடுத்த முயற்சி இது. [இது பற்றிய விபரம் பின்னால் இடம் பெறுகிறது.]

## உருவகக் கதை

நீலாவணனின் எட்டு உருவகக்கதைகள் எமக்குச் கிடைத்துள்ளன. 1963, 64ஆம் ஆண்டுகளில் தினகரன் வீரகேசரி பத்திரிகைகளில் உருவகக் கதை எழுதுவதில் இவர் ஈடுபட்டிருக்கிறார். கீழ்வரும் பட்டியல் இதனைக் காட்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| விழிப்பு | — | தினகரன் | — | 8-12-63 |
| சுதந்திரன் | — | வீரகேசரி | — | 12-12-63 |
| வாரிசு | — | வீரகேசரி | — | 12-04-64 |
| அஞ்ஞானம் | — | தினகரன் | — | 26-04-64 |
| ஊகம் | — | தினகரன் | — | 26-04-64 |
| பயன் | — | வீரகேசரி | — | 17-05-64 |
| இரசிகர் | — | தினகரன் | — | 11-10-64 |
| பக்குவம் | — | வீரகேசரி | — | 29-11-64 |

குறிப்பாக ஒரு வருட காலம் இத்துறையில் ஈடுபட்ட இவர் பின்னர் உருவகக் கவிதைகள் எழுதவில்லைபோலும் உருவகக் கதைகளில் இவர் ஈடுபாடு கொள்ளக் காரணம் யாது? இக்காலகட்டத்தில் நீலாவணன் ஆன்மீக சிந்தனையின் பாலும், அது சார்ந்த தத்துவததின் பாலும் ஈடுபட்டமை ஒரு காரணமாகலாம். இன்னொரு காரணமும் உண்டு. பாடும் மீனின் கேள்வி பதிலில் அது தெளிவாகின்றது.

1967இல் பங்குனி பாடும் மீன் இதழில் கேள்வியும் பதிலும். என்ற பகுதியில் சாய்ந்தமருது அபூபக்கர்

படிப்பகம்

www.padippakam.com



என்பவர் உருவகக் கதைகள் அநேகமாக வெளிவருகின்றதில்லையே ஏன்? என்ற கேள்விக்கு நீலாவணன் பின்வருமாறு பதில் தருகிறார்.

''உருவகக் கதைகளா? வெளிவருகின்றனவே! சுதந்திரன் பத்திரிகையில் கவிதையாக வெளிவந்த குறிக்கோள், தினகரன் இலக்கிய பரிசோதனைக் களத்தில் 'மரபு' என்ற பெயரில் உருவகக் கதையாக வந்து ஜமாய்த்ததே படிக்கவில்லையா?''

கேள்விக்கு ஏற்ற மறுமொழியாக இது இல்லை. ஒரு முக்கிய விடயத்தை வெளிப்படுத்த நீலாவணன் கேள்வியை துணையாகக் கொள்கிறார். குறிக்கோள் நீலாவணனின் கவிதை, 'மரபு' உருவகக் கதை எழுதியவர் எம். ஏ. ரஹ்மான்.

தன் கருக்களை மற்றவர்கள் உருவகக் கதைகளாக்கு கையில் தானே அவற்றை ஆக்கினால் என்ன என்ற ஆதங்கமும் நீலாவணன் உருவுகக் கதைகள் எழுதக் காலாய் இருந்திருக்கலாம். பின்னாளில் அவர் சாந்தமடைந்திருக்கலாம். அல்லது ரஹ்மானுடன் சமாதானம் அடைந்தபின் கோபம் ஆறி தொடராமல் விட்டிருக்கலாம்.

## சிறுகதை

1952இல் சுதந்திரனில் பட்டமரம், பசியடங்கியது, தப்பிவிட்டாள், நாணயம், பழுதை முதலிய கதைகளை எழுதியுள்ளார். [30-6-62 வீரசேகரி]

நீலாவணன் எழுதிய மூன்று சிறுகதைகள் நமக்குக் கிடைத்துள்ளன. 1952இல் சுதந்திரனில் எழுதிய பிராயச் சித்தம் என்ற சிறு கதையொன்று. மற்றது 17-7-55இல் சுதந்திரனில் வெளியான பட்டமரம் என்ற சிறுகதை.

படிப்பகம்

www.padippakam.com



மூன்றாவது சிறுகதை நீலாவணனால் பிற்காலத்தில் எழுதப்பட்டது. [ஆண்டு தெரியவில்லை] ஆனால் நீலாவணன் நினைவு நாளையொட்டி 23-1-1983 வீரகேசரியில் வெளியான ஒட்டுறவு என்னும் சிறுகதை.

பிராயச்சித்தம் என்னும் சிறுகதை [1952] கே. சி. நீலாவணன் என்ற பெயரிலும், பட்டமரம் நீலாவணன் என்ற பெயரிலும் வெளிவந்துள்ளது. ஒட்டுறவு கையெழுத்துப் பிரதியில் நீலா. சின்னத்துரை என்று எழுதப்பட்டுள்ள நீலாவணனின் புனைப்பெயர் வீரகேசரியில் ஒட்டுறவு வெளியானபோது நீலாவணன் என வெளிவந்துள்ளது. ஒட்டுறவின் எழுத்துப் பிரதியில் அமைந்த கதையின் முடிவு வாக்கியங்கள், வீரகேசரியில் வெளியானபோது மாற்றியமைக்கப்பட்டுள்ளன. எழுத்துப் பிரதியின் முடிவு வாக்கியங்களே சிறப்புடையதாய் உள்ளன.

பிராயச்சித்தம் (1952) கதை ஆசிரிய மாணவராகப் பயிலும் காலத்தில் ஒரு மாணவனுக்கும் மாணவிக்கும் இடையில் நடைபெறும் காதல் பற்றியது. மிகச் சாதாரணமான காதல் கதை அது.

பட்டமரம் (1955), ஒருபண்ணையாரின் மகளுக்கும், ஒரு ஏழைக் கணக்கப்பிள்ளைக்கும் ஏற்பட்ட காதல் கதையே. இதில் ஏழை பணக்காரபேதம் காரணமாக பண்ணையாரால் கணக்கப்பிள்ளை கொலைசெய்யப்படுகிறார். மகள் தற்கொலை செய்கிறாள். காதலுக்கு எதிராக நிற்கும் அந்தஸ்தைச் சாடுவதாக அமைந்துள்ளது இக்கதை.

(இக்கதை 17-12-57 இல் ஈழகேசரியில் வெண்பாவில் அமைந்த நெடுங்கவிதையாக நீலாவணனால் எழுதப்பட்டுள்ளது).

படிப்பகம்

www.padippakam.com



பிராயச்சித்தமும், பட்டமரமும் செயற்கைப் பாங்கான நடையில் எழுதப்பட்ட கதைகளாகும். பிராயச்சித்தத்தில் வரும் கதாநாயகன் நடராஜன் தன் காதலியிடம் பின்வருமாறு கூறுகிறான்.

> "நல்லம்மா நீ இன்று எழுதிய கடிதத்தை நான் சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் எதிர் பார்த்தேன். அதற்கு நீ தந்தபரிசில் நான் சமூகத்தின் கண்களுக்குச் சாக்கடை நீரானேன்... சமூகத்தால் தூற்றப்பட்டேன். ஏன்! மானத்தையே காற்றில் பறக்கவிட்டேன்:

இது ஒரு செயற்கைப் பாங்கான உரையாடலாகும்.

பட்ட மரத்திலே தன் மகளோடு ஒன்றாய் இருந்த கணக்கப்பிள்ளை கந்தசாமியைப் பார்த்து பண்ணையார் பின்வருமாறு கூறுகிறார்.

> "அடே நன்றி கெட்டவனே வளத்தவன் மார்பிலே பாயத் தொடங்கி விட்ட செம்மறியே என் உப்பைத் தின்று வளர்ந்த எனக்கா துரோகமே செய்தாய், துரோகி உன்னை என்ன செய்கிறேன் பார்."

இதுவும் ஒரு செயற்கைப் பாங்கான கூற்றே.

பிராயச்சித்தத்தில் வரும் சாக்கடை நீரானேன், சமூகத்தால் தூற்றப்பட்டேன் என்னும் கூற்றுக்களும், பட்டமரத்தில் வரும் பண்ணையார் பாத்திரமும் அவர் கூற்றுக்களும் தி. மு. க. பாணி எழுத்துக்களையும் அக் காலத்தில் வெளிவந்த அண்ணாதுரையின் ஓரிரவு, கருணாநிதியின் பராசக்தி படங்களையும் நினைவூட்டுகின்றன. ஆரம்பகாலத்தில் நீலாவணன் அத்தகையோரின்

www.padippakam.com



இலக்கியச் செல்வாக்கிற்குட்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்காலக் கட்டத்தில் ஈழத்தின் சிறுகதை, இலக்கியமாக உருக்கொண்டு விட்டது. அ. செ. முருகானந்தன், க. தி. சம்மந்தன், இலங்கையர்கோன், வைத்திலிங்கம், சோ. சிவபாத சுந்தரம் ஆகியோரின் சிறுகதைகள் வெளியாகிவிட்டன. இக்கதைகளின் தாக்கம் நீலாவணனை எட்டவில்லை போலும்.

ஆனால் இவரது ஒட்டுறவு சிறுகதை (1983) (70 களில் இது எழுதப்பட்டிருக்கலாம்.) ஒரு சிறுகதைக்குரிய கட்டிறுக்கத்தைக் கொண்டிருக்கின்றது. உரையாடல்கள் இயல்பாய் அமைந்துள்ளன. அக்கதையில் வரும் அரியம் ஒரு கிழவனைப் பார்த்து இவ்வாறு கூறுகிறார்.

> ''இந்தக் கிழடனுக்கு பெரிய ராங்கிதான் அக்காவோடையும், ஐயாவோடையும் இவனுக்குச் சரியான எரிச்சல். கிழடன், அவர்ர ஓசிலப் பாரன்...... கறிச்சட்டிப் புறத்தி மாதிரி முகமும் ஆளும்.

இங்கு இயல்பான பேச்சோசையுடன் கிராமிய உவமையும் கையாளப்பட்டுள்ளது.

எதுவும் நிரந்தரமல்ல, எதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுவே வாழ்க்கை நியதி என்ற ஒரு தத்துவத்தை இக்கதை கருவாகக் கொண்டுள்ளது. (எழுத்துப் பிரதியின் முடிவு அதனைத் தெளிவாகத் தருகிறது.)

சிறுகதை இலக்கிய வடிவம் பற்றிய ஒரு தெளிவுக்குப் பின்னரேயே இக்கதையை நீலாவணன் எழுதியிருக்க வேண்டும். ஈழத்து இலக்கிய உலகில் சிறுகதைச்

www.padippakam.com



துறையில் ஏற்பட்ட வளர்ச்சியும், எஸ். பொ, இலங்கையர் கோன் (சிறப்பாக இலங்கையர் கோன்), வ.அ. இராசரத்தினம் போன்ற சிறுகதையாசிரியர் தொடர்பும் இதற்குப் பக்க காரணங்களாய் அமைந்திருக்கலாம்.

1955களில் நீலாவணனுக்குக் கைவராத சிறுகதை 1970களில் கைவர ஆரம்பித்திருக்கிறது. தொடர்ந்து எழுதியிருப்பாராயின் நீலாவணன் ஒரு நல்ல சிறுகதை ஆசிரியராகவும் பரிணமித்திருக்கக் கூடும்.

## கட்டுரைகள்

நீலாவணனின் 4 கட்டுரைகள் கிடைத்துள்ளன. அச்சுக்கலை பற்றிய ஒரு கட்டுரை கே. சின்னத்துரை என்ற பெயரில் சுதந்திரனில் 50களில் வெளிவந்துள்ளது. இலங்கையர் கோன் பற்றி இரு கட்டுரைகள் ஒன்று தினகரனில் 14.12.62இல் வெளிவந்தது. இவர்தான் இலங்கையர் கோன் என்பது அக்கட்டுரையின் தலைப்பு, இன்னொன்று நானும் இலங்கையர் கோனும் எனும் தலைப்பில் வெளிவந்துள்ளது. வெளிவந்த பத்திரிகை தெரியவில்லை. நறுக்காகக் கிடைத்துள்ளது. இரண்டு கட்டுரைகளிலும் தனக்கும் இலங்கையர்கோனுக்குமுள்ள உறவுகளைக் கூறுகின்றார். இலங்கையர்கோனின் குணாதிசயத்தின் ஒரு வெட்டுமுகத் தோற்றத்தைக் காட்டும் நல்ல கட்டுரைகள். மற்றக்கட்டுரை கலைச் செல்வியில் என்னைக் கவர்ந்த என்கவிதை என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை. இதில் தன் கவிதைகள் அனைத்துமே தன்குழந்தைகள்தான் எனக் கூறும் நீலாவணன் மண்ணிடை இரவுக்கன்னியின் ஆட்சி இன்னும் ஓயவில்லை என்று தொடங்கும் தன் கவிதையொன்றை தனக்குப் பிடித்த கவிதை என்கிறார். இக்கவிதை 1961 புதினம்; தீபாவளிக் கவியரங்கில் போகிறேன் என்றோ சொன்னாய் என்ற தலைப்பில் பிரசுரமானது. இக்-

www.padippakam.com



கட்டுரைகள் விவரணக்கட்டுரைகள் சுவாரஸ்யமாக எழுதுவது நீலாவணனுக்குக் கைவரும் என்பதை நிரூபிக்கின்றன.

## விருத்தாந்த சித்திரம்

பாடும் மீன் இரண்டு இதழ்களிலும் இரண்டு விருத்தாந்த சித்திரங்களை நீலாவணன் அம்மாச்சி ஆறுமுகம் என்ற பெயரில் எழுதியுள்ளார். ஒன்று வி.ஸி. மெம்பர் ஆறுமுகம் பாடும் மீன் மாசி 1967) போடி மகள் பொன்னம்மா (பாடும் மீன் பங்குனி 1967) இரண்டிலும் அவர் கையாளும் மட்டக்களப்புப் பேச்சு வழக்குத் தமிழ் குறிப்பிடற்குரியவை. நடைச் சித்திர பாணியில் அமைந்த இவை அந்தந்த பாத்திரங்களே தம்மைப் பற்றிக் கூறுவதாக அமைந்துள்ளன.

வி.ஸி. மெம்பர் ஆறுமுகம் தன்னைப் பற்றி இப்படிக் கூறுகிறார்.

> நான் எப்படி வெல்லாமப் போற, எண்ட
> சாதி என்ன, சனமென்ன, குலம் என்ன. கோத்திரம்
> என்ன, ஊரெல்லாம் எண்ட அப்பன்மச்சான்
> சாதியான்
> ஓய்! பருப்புப் போல முன் நூறு வோட்ட வச்சுப்
> போட்டு, அந்தக் கோப்பி குடியானுக்கு வி.சி.
> கதிரயைக் கொடுத்தா நானும் எண்ட பனியாரந்
> தின்னிக்
> குடியானும் உசிர வச்சிருக்கிறதப் பார்க்க
> உப்புச்சிரட்டைக்
> குள்ள விழுந்து சாகோணும்.

போடிமகள் பொன்னம்மாள் தன்னைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:

படிப்பகம்

www.padippakam.com



வெடிய ரசிப்போடியெண்டா குடியெல்லாம்
நடுங்கும்...
எண்ட அப்பன் அப்படி இப்பிடிப் போடியாகா.
அவர்
ஊர்ப்போடி. போடி மகன் போடி. பரம்பரைப்
போடி..
அவர் இந்த ஊரைக் கட்டி ஆண்டாப்பல
இன்னும் ஒருவர்
பாக்கயா... அதில வேலல்ல.

இன்னும் பல பாத்திரங்களின் குணாதிசயங்களை இவ் வகையில் எழுதி வைத்திருந்தார் என அறிகிறோம். அவை நம் பார்வைக்குக் கிடைக்கவில்லை.

இவ்வண்ணம் மட்டக்களப்புப் படுவான்கரைத் தமிழை அழகாகக் கையாள்வதிலும் பாத்திரங்களின் நடத்தை குணாதிசயங்களை நுணுக்கமாக அவதானிப் பதிலும் ஆற்றல் பெற்றவரான நீலாவணன் சிறு கதைத் துறையில் இறங்கியிருப்பின் மட்டக்களப்புத் தமிழ் இலக் கியத்தில் நன்கு பதிவு செய்யப்பட்டிருக்கும்.

கட்டுரைகள் விருத்தாந்த சித்திரங்களுடன் சங்கு சக்கரன் என்ற பெயரில் காமம் செப்பாது என்ற தலைப் பில் இலக்கியக் கண்டனங்களும் நீலாவணன் எழுதியதாக அறிகிறோம். 'ஒன்று குறும்பா தமிழ்க்குப் புதிதா? என்ற கட்டுரை. [1967 பாடும்மீன்] இக்கட்டுரை மகாகவி குறும்பாவைத் தமிழுக்கு அறிமுகம் செய்தார் என்றிவர் களைக் கிண்டல் செய்து அவ்வடிவம் தமிழில் முன்ன மேயே இருந்தது என்பதைக் காட்டி, அத்தகையதொரு பாவை நீலாவணன் எழுதியுள்ளார் எனச் சுட்டிப் பாட் டையும் தருகிறது.

அடுத்து கரவெட்டி தந்த கவிஞர் க. வீ. ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் இருட்டடிக்கப்பட்டது ஏன்? [1967 பாடும் மீன்] எனும் கட்டுரை. கனக. செந்திநாதனின்

www.padippakam.com



ஈழத்து இலக்கிய வளர்ச்சி எனும் நூலில் க. வீ. என அழைக்கப்படும் பண்டிதர் க. வீரகத்தியின் பெயர் இடம் பெறாமையைக் கண்டித்து அப்பெயர் இடம் பெற வேண்டியதற்குரிய காரணங்களையும் கூறுகின்றது.

இரண்டும் ஒருவித கண்டன விமர்சனக் கட்டுரைகளே முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்திற்கு எதிராகக் கண்டனம் தெரிவித்ததுபோல நற்போக்கு இலக்கிய இயக்கம் நடத்திய குழுவுக்கு எதிராக இவர் கண்டனம் தெரிவித்தமைக்கு இக்கட்டுரைகள் சான்றாகும். மகாகவியின் குறும்பாகவும், கனக. செந்திநாதனின் ஈழத்து இலக்கிய வளர்ச்சியும் அரசு வெளியீட்டினால் இளம்பிறை ரஹ்மானால் வெளியிடப்பட்டவையாகும். ரஹ்மான் நீலாவணனின் நெருங்கிய நண்பர் எனினும் நட்பென்று முகம் பார்க்காத நீலாவணனின் தன்மை இதிற்தெரிகிறது.

தனிப்பட்ட தாக்குதலாயல்லாமல் நாகரிகமான விமர்சனமாக இக்கட்டுரைகள் அமைந்துள்ளமை குறிப்பிடற்குரியவை.

இவற்றைப் பார்க்கையில் நீலாவணனுக்கு கட்டுரை கைவந்த கலைபோல் தெரிகிறது.

# நீலாவணனைப் புரிந்து கொள்ளல்

நீலாவணன் வாழ்ந்த காலத்தில் சிறப்பாக இந்திய அரங்கிலும், குறிப்பாக இலங்கை அரங்கிலும் நடைபெற்ற அரசியல், இலக்கிய நிகழ்வுகள் நீலாவணனை மறைமுகமாகவோ நேரடியாகவோ தாக்கியுள்ளன. அத்தாக்குதலுக்கு அவர் எதிர்வினை புரிந்த விதத்தை நாம் அவர் கவிதைகளிற் காணலாம் அவரைத் தாக்கிய நிகழ்வுகளில் முக்கியமானவை.

(i) இந்திய சுதந்திரப் போரின் விளைவாக வெளிவந்த பாரதியும் அவர் கவிதைகளும்.

படிப்பகம்

www.padippakam.com



(ii) திராவிட இனப் பெருமைவாதமும் அதன் விளைவாக எழுந்த 'பகுத்தறிவுவாத சீர்திருத்தச் சிந்தனைகளும் (அண்ணாதுரை, கருணாநிதி, பாரதிதாசன்)

(iii) தமிழரின் தனித்துவம் பெருமை பேசும் இந்தியாவில் எழுந்த தமிழ்த் தேசியவாதச் சிந்தனைகள்.

(iv) இலங்கையில் ஏற்பட்ட தமிழ் தேசியவாதச் சிந்தனைகள் அதனடியாக எழுந்த சமஷ்டிக் கட்சியின் செல்வாக்கு.

(v) 1960களில் ஏற்பட்ட ஈழத்து அரசியல் மாற்றம் அதனடியாக எழுந்த சிந்தனைகள் [மறைமுகமான தாக்கல்]

(vi) ஈழத்துத் தமிழரின் தனித்துவம் பேணும் இலக்கியம் என்ற கோஷம்.

(vii) முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அவர்களது இலக்கியக் கோட்பாடு [இது அவரை மறைமுகமாகத் தாக்கின]

(viii) முற்போக்கு இலக்கியக் கோட்பாட்டுக்கு எதிராக எழுந்த கோட்பாடுகள்.

(ix) எஸ். பொ., ஏ.ஜெ. கனகரத்தினா இலங்கையர் கோன் மஹாகவி ஆகியோரின் தொடர்புகள்

(x) மரபு வழிபட்ட இலக்கியச் சிந்தனைகள், புலவர் மணி சரிபுதீன், பண்டிதர் வி. சி. கந்தையா, பண்டிதர் பூபால பிள்ளை ஆகியோரின் தொடர்புகள்.

(xi) எஸ். டி. சிவநாயகம், எம். ஏ. ரஹ்மான் ஆகியோரது ஊக்குவிப்பு, எஸ். டி. சிவநாயகம் தன்னைக் கவிதை எழுதச் சொல்லவும் அதுவே தனது துறை எனக் காட்டியதாகவும் நீலாவணன் ஒரு பேட்டியில் கூறியுள்ளார். ரஹ்மான் மட்டக்களப்புக்கு வரும்போதெல்லாம் நீலாவணன் வீடு சென்று எழுத ஊக்கம் தருவதும், கடித மூலம் ஊக்கம் தருவதும் எஸ்.பொ.வின் கட்டுரை மூலம்

தெரியவருகிறது. எழில்வேந்தனும், எஸ். பொ. கூற்றை உறுதிப்படுத்தினார்.

மேற்குறிப்பிட்ட தொடர்புகள், நிகழ்வுகள் யாவும் அவர் வாழ்ந்த காலத்திற்குறியன சிலவற்றோடு அல்லது சிலரோடு நேரடியான தொடர்பு அவருக்குண்டு அவர் எழுத்து வெளிப்பாட்டினை மேற்குறித்த நிகழ்வுகளும் தனி மனிதர்களும் நிர்ணயிக்கும் காரணிகளாயினர். அத்தோடு நீலாவணனின் ஆளுமை, குணாதிசயம் என்பன பற்றி அறிதலும் அவசியம்.

17-12-75இல் இவரை அறிமுகம் செய்த கீரன் இவரின் தோற்றம் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

> ஒல்லியான தேகம். துல்லியமாகப் பிரகாசிக்கும்
> பச்சரிசிப்பற்கள்
> பொது நிறம். அரும்பிய மீசை, புன்முறுவல்
> குறையாத முகம்,
> நிமிர்ந்த உடல் நேரிய நோக்கு இவர்தான்
> நீலாவணன்

சுத்தமாக உடுப்பார் எப்போதும் வெள்ளை உடுப்பு அணிவார். தன்னுடைய அழகில் அக்கறை கொண்டவர் சாப்பாட்டுப் பிரியரான இவர் விருந்தோம்பும் பண்பு மிக்கவர். வேளாண்மை எனத் தன்வீட்டுக்குப் பெயரிட்டவர். எப்போதும் அங்கு நண்பர்கட்கும், விருந்துக்கும் குறைவில்லை (இதனால் நீலாவணனின் மனைவி அழகேஸ்வரிக்கு அங்கு வந்த எழுத்தாளர்களெல்லாம் உறவினர்கள் போலாயினர்) உலக சுகங்களை நன்கு அனுபவித்தவர், பிள்ளைகள் மீது மிக்க பாசமும், நண்பர்கள் மீது அன்பும் கொண்டவர்.

மிகவும் உணர்ச்சிகரமானவர், நீலவானன் 17.12.75 சுதந்திரன் அறிமுகத்தில்,

www.padippakam.com



"இறுதிமூச்சுவரை எழுதி வியர்த்ததே
இறப்பில் அமைதி காணவேண்டுமென்று இவர்
உணர்ச்சியோடு அடிக்கடி கூறுவார்"

என்று கூறப்பட்டுள்ளது. 30.6.62 தினகரனில் நாடறிந்த எழுத்தாளர் என்ற தலைப்பில் இவர் பற்றி வெளிவந்த கட்டுரை பின்வருமாறு கூறுகிறது.

மிக எளிமையான இனிமையான சுபாவமும்
கவிதா உணர்ச்சி (கவிஞனாகவே சதா
கற்பித்துக் கொண்டு வாழ்க்கையைப்
பார்க்கும் முறை) யும் கொண்டவர் இவர்.

அவருடைய உணர்ச்சி பற்றி அவரது நண்பர்கள் பலரும் கூறுவர்.

உணர்ச்சியோடு முற்கோபமும் இவரது பிரதான குணாதிசயம். இம்முற்கோபத்தாலும் எளிதில் உணர்ச்சி வசப்பட்டு விடுவதாலும் பல நண்பர்களைப் பிரிந்துள்ளார். எதிலும் செம்மையை எதிர்ப்பார்ப்பவர். அவரளவில் சரி எனக் கண்டால் நட்பை முறித்துக் கொள்ளத் தயங்காதவர். (உலக நெளிவு சுழிவுகளை விளங்கிக் கொள்ளாத ஒரு கிராமிய அல்லது குழந்தை மனோபாவம் அவருக்கு இருந்தமைதான் இதற்குக் காரணம் போலும்) இம்முற்கோபமும், நண்பர்களைப் பற்றிய பிழையான கணக்கிடலும், திடீர் உணர்ச்சியும் இவரின் இலக்கிய வளர்ச்சியிற் பெரும் தடங்கல்களை ஏற்படுத்தின.

இவருக்குப் பிடியாதவை பட்டண வாழ்க்கை; உழையாத மனிதர்; வாயாடிப் பெண்கள் என்று சுதந்திரன் கூறுகிறது.

கா—4

படிப்பகம்

www.padippakam.com



இதே சுதந்திரனில் ''வறுமையின் வயிற்றில்-புரட்சியின் எழுச்சியில், பஞ்சத்தின் பரிதாபத்தில் தான் உயிர் கொண்ட கவிதைகளைப் படைக்க முடியும் என்று இவர் கூறும் கருத்து பல இளம் கவிஞர்கட்குப் பீதியை உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை'' ஆனால் இது அவரது அனுபவ முடிவே'' என்று கூறப்பட்டிருப்பினும் எனக்குக் கிடைத்த பத்திரிகை நறுக்கில் நீலாவணன் தன் கைப்பட இவற்றிற்கு அருகே 'சொல்லாத கருத்துக்கள்' என எழுதியுள்ளார். 55 இல் இவரது கவிதை நோக்கு இப்படியில்லை என்பதை அவரது மறுப்புக் கையெழுத்து எமக்குக் காட்டுகிறது.

நீலாவணன் வாழ்ந்த காலப் பின்னணியையும், நீலவாணனின் குணவியல்புகளையும் மனதிலிருத்தி அவரது படைப்புகளுக்கூடாக அவர் புலப்படுத்தும் கருத்துக்களை அடித்தளமாக வைத்து காலக்கூறுகளாக அவர் வாழ்வைப் பிரித்து நோக்கின் நீலவாணனையும், அவர் கவிதைப் போக்கையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

*1947* இலிருந்து *1960* வரை
*1960* இன் முற்பகுதி தொடக்கம் *1967* வரை
*1960* இன் பிற்பகுதி *(1967)* தொடக்கம் *1975* வரை

என்று காலக் கூறுகளாக இவரது கவிதைக் கருத்து வளர்ச்சியினைப் பிரித்து நோக்கலாம் போலத் தெரிகிறது. இதனை அவரது வயது அடிப்படையில் இளம் பருவம், நடுப்பருவம், முதிர் பருவத்தின் ஆரம்பம் எனக் குறிப்பிடலாம்.

*1940 - 1960 -* இளம் பருவம் *(17* வயது*-30* வயது*)*
*1960* இன் முற்பகுதி நடுப்பருவம் *(30-35* வயது*)*
*1960* இன் பிற்பகுதி முதிர்ப் பருவம் ஆரம்பம் *(40* வயதும் அதற்கு மேலும்*)*
தொடக்கம் இறக்கும் வரை

படிப்பகம்

www.padippakam.com



## 1947இலிருந்து 1960 வரை நீலாவணன் ஆக்கங்கள்

இவரது ஆரம்பகால எழுத்துக்களுக்கு காதலும் தமிழ் உணர்வுமே பிரதான கருக்களாக இருந்தன. வறுமையிலிருந்து கவிதை பிறக்கும் என்று சுதந்திரன் எழுதியதற்கு இவர் தன் கையால் மறுப்பு எழுதியிருப்பதை இங்கு நினைவு கூர்க.

இளமையில் தீவிர தமிழ் உணர்வும். காதல் கவிதைகள் பால் ஆர்வமும் இவரிடம் இருந்தன. சுதந்திரன் பேட்டியில் ''இறுதி மூச்சு வரை எழுதி வியர்த்து இறப்பில் அமைதி காண வேண்டுமென்ற'' வார்த்தையில் அவரது இளமை வேகம் காணப்படுகிறது,

1950களில் திராவிட முன்னேற்றக் கழகத்தினால் தீவிர தமிழுணர்வு தமிழ் நாட்டில் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்மொழி என்று தோன்றியது என்று தெரியாத ஐதீகங்கள் பரப்பப்பட்டன. தி மு. க. கருத்துக்களினாலும், பாரதிதாசனின் கவிதைகளாலும் மிகுந்த பாதிப்புக்குள்ளாகியிருந்த நீலாவணன் அதே பாணியில் சுதந்திரனில் எழுதிய கவிதைகள் சில கீழே தரப்படுகின்றன. ''தமிழே எழுவாய் !'' என்ற தலைப்பில் 8-9-57 ஈழகேசரியில் வெளியான கவிதையில்,

''என்று நீ பிறந்தாய் என்றுனை யாரும்
எழுதி வைத்திலர் இனி எழுதவும் ஒண்ணா''

எனக் கூறுகிறார்.

27-12-59 சுதந்திரனில் வெளிவந்த தமிழ்ச் சிறுவன் எனும் கவிதையில்

முலை அரிந்து தம் கற்பினால் எரி மூட்டுவார்
பகைவாட்டுவார் நிலைபெறும் திருக்குறளின் நீதியை
நிறுத்தி வைத்தவர் குலத்துயான்.

எனத் தமிழின் பண்டைப் பெருமையைப் பேசுகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



தமிழ் உணர்வு மீதூரப் பெற்றமையினால் தன் குழந்தையை தமிழின் சிறப்பாக உருவகித்துப் பாடுகிறார். எல்லாம் தமிழாய்க் கண்ட ஓர் இன உணர்வின் வெளிப்பாடு இது.

''கண்மலராய்'' என்ற தலைப்பில் இக்கவிதை வெளியாகியுள்ளது.

எழிலரசி...
செந்தமிழில் கொஞ்சும்
சிலம்பே ! திருக்குறளே !!
முந்தைத் தவப் பயனால்
மூப்பகன்று நான் வாழ
வந்துதித்த வானின் வளர் பிறையே
செந்தமிழர் காவியமே
செக்கர் வான் ஓவியமே.

என்று உருவமாகக் கவிதை செல்கிறது. சின்னஞ்சிறு கிளியே என்று குழந்தையை கிளி, செல்வக் களஞ்சியம் கனியமுது, பேசும் பொற்சித்திரம், எனப் பாரதி பாட நீலாவணனோ தமிழ் உணர்வு மீதூரப்பெற்று குழந்தையை சிலம்பு, திருக்குறள் செந்தமிழர் காவியம் என்று உருவகப்படுத்துகிறார்

இத்தகைய தமிழ் உணர்வின் தர்க்கரீதியான வளர்ச்சி தமிழர்க்கென்று தனிப்பண்பாடு, தனிப்பிரதேசம், தனி நாடு என்று சிந்திக்கும் நிலைக்கு அவரைத்தள்ளியது.

தமிழ்க்குரலில், 'தன்மானம் தந்த நாள்'' என்ற தலைப்பில் எழுதிய கவிதையில்,

நலமிக்கு வாழ்ந்திட்ட தமிழினம்தான் இன்று
நாயினும் கடையராய் வாழ்ந்திடுதல் நன்றோ
சலமிக்க ஈழமதில் தனியரசு பெறுநாள்
தன்மானம் காத்திட்ட நாளாகுமென்றோ

எனப் பாடுகிறார். தமிழினம் ஒரு காலத்தில் சிறப்பாக வாழ்ந்தது இன்று சிறப்பின்றி வாழ்கிறது. சிறப்பாக வாழத் தனியரசு தேவை என்ற அவர் அரசியற் பார்வை

www.padippakam.com



கவிதையிற் தெரிகிறது. இது அன்று அரும்பிய தமிழ்த் தேசிய வாதத்தின் பாதிப்பு ஆகும்.

இத்தகைய ஒரு அரசியற் சிந்தனை கொண்டவர். அக்காலத்தில் இக்கொள்கைகளை முன்வைத்த தமிழரசுக் கட்சி என அழைக்கப்பட்ட சமஷ்டிக் கட்சியைச் சார்வதில் வியப்பில்லை. ஈழத்துக் காந்தி என்றும், தமிழர் தலைவர் என்றும் 1950—60களில் தமிழ் மக்களிற் பெரும்பான்மையோரால் அழைக்கப்பட்டவர் செல்வநாயகம். சத்தியாக்கிரகத்தை அவர் அன்று காந்தி வழியிற் போராட்ட ஆயுதமாகக் கையாண்டார்.

''சேனையிலே சேர்'' என்ற சுதந்திரன் கவிதையொன்றில் (எழில்காந்தன் என்ற பெயரில் எழுதப்பட்ட கவிதை இது)

இணைப்பரசு பெற்றெங்கள் இன்பத் தமிழை
அணையேற்ற வேண்டின் அதோ
துணையாவான்
எல்லோரும் காந்தியென ஏற்றிப் புகழ்கின்ற
செல்வன் அறச் சேனையிலே சேர்.

அரசியற் கட்சியின் சார்பும் தொடர்பும் இவரை கட்சிக் கவிஞனாக்கியிருக்க வேண்டும். எனவே கட்சியின் கொள்கைகள் சிலவற்றை வெளியிடும் கவிதைகளும் இவர் மூலம் வெளிவந்தன.

கட்சி முன்னெடுத்த அறப் போராட்டம், ஆவணிப் போராட்டம் பற்றிக் கவிதைகள் எழுதியுள்ளார். ''சங்கொலிகேட்குது'' என்ற கவிதையில்

காவினில் வந்து கருங்குயிலொன்று
கதவு திறந்திடுவீர்
ஆவணி வந்தது, ஆவணி வந்தது
அத்துயில் நீங்கும் மெனக் கூறுவதாகப்

பாடுகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



அத்தகையதொரு ஆவணிப் போருக்குச் செல்லுமுன் தன் மனைவிக்கு கூறுமாப்போல் பின்வருமாறு கூறுகிறார் -

எந்தன் மகன் எழில் வேந்தனை என்னுயிர்
ஏகிய தென்றவுடன்
சிந்தையின் றொரு செந்தமிழ் அன்னையாய்
செய்கை நினைந்துடனே
நிந்தனை அற்றிடு அன்பெனும் ஆயுதம்
நீயவனுக்கீந்தே
தந்தை நடந்த பாதையில் ஓடெனத்
தட்டி அனுப்பிடுவாய்.

அன்பெனும் ஆயுதங் கொடுத்து தந்தை பாதையில் விரைவாக ஓடிச் செல்லும்படி கூறு என்று சொல்கிறார்.

''படையோடொரு படையாய் நட,'' ''துவக்கு பணியை'' ''எவர் வேண்டும்?'' போன்ற கவிதைகளை இவரது அரசியற் பிரசாரக் கவிதைகட்கு உதாரணமாகக் கூறலாம். தமிழரசுக் கட்சித் தலைவர் வன்னிய சிங்கம் இறந்தபோது இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார். ''செல்வர் தம் மூத்த மகன்'' அவர் என்றும் ''பாடையிற் பார்த்த கண்கள் பாதகம் புரிந்த கண்கள்'' என்றும் கவிதை அழகோடு கூறுகிறார். நேரடியாக அரசியற் பிரசாரக் கவிதை எழுதியதற்கு உதாரணமாக சுதந்திரனில் எழுதிய எண்ட எண்ட மாத்தையா எதிர்மான சிங்க(ள)மே என்ற கவிதையைக்குறிப்பிடலாம். எண்ட என்பது சிங்களப்பதம் இதன் தமிழர்த்தம் வாருங்கள் என்பதாகும்) சிங்கள மக்களோடு சேர்ந்து தமிழ் மக்களை விற்றுவிட்டார். எதிர்மனசிங்கம் என்ற குற்றச்சாட்டு அதிற் தொனிக்கிறது. (மட்டக்களப்புப் பட்டிருப்புத் தொகுதியில் தமிழரசுக்கட்சி வேட்பாளரான இராசமாணிக்கத்திற்கு எதிராக போட்டியிட்டு அன்று ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்தவர், எதிர்மன சிங்கம். மந்திரிப் பதவியும் பெற்றவர். தனிச் சிங்களச்

www.padippakam.com



சட்டத்தைக் கொணர்ந்த ஸ்ரீலங்கா அரசோடு சேர்ந் தமையை தமிழரசுக் கட்சி அன்று கண்டனம் செய்ததுடன் அவரை எட்டப்பன் எனவும், அழைத்தது.)

பட்டிருப்புப்பாவாணர் பாடியளித்த வரவேற்புப்பா என மகுடமிடப்பட்ட இக்கவிதையை நீலாவணன் இராமபாணம் என்ற புனை பெயரில் எழுதினார்.

எண்ட எண்ட மாத்தயா
எதிர்மான (சிங்களமே)
பண்டெங்கள் பட்டிருப்பின்
பாவத்தால் வந்துதித்த
சண்டாளி...

என்று தொடங்கும் இது கடுமையான கண்டனக் கவிதையாக, வசைக் கவிதையாக அமைந்துள்ளது.

சிங்கள ஸ்ரீ எழுத்தை கார்களில் பொறிக்க வேண்டும் என்று சட்டம் கொணர்ந்தது, அன்றை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசு இதனை எதிர்த்துப் பெரும் ஸ்ரீ அழிப்புப் போராட்டத்தை அன்று தமிழரசுக் கட்சி நடத்தியது. சிங்கள ஸ்ரீயை நண்டெழுத்து என்று சுதந்திரன் பகிடி செய்தது.......நண்டெழுத்து வேண்டாம் நம்க்கு என்று ஒரு வெண்பாப் போட்டியைக் கூட அது நடத்தியது. போராட்டத்தை முன்னின்று நடத்தியவர் அன்று தளபதியென்று அழைக்கப்பட்ட அ.அமிர்தலிங்கம். தமிழரசுக் கட்சிக்கு எதிராக எழுந்த தமிழ்ப் பேசும் மக்கள் முன்னணி அன்று இதுபற்றி எதுவும் கூறவில்லை. அது அரசு சார்பாக இயங்கியது. இவையெல்லாம் நீலாவணன் கவிதைகளில் இடம் பெறுகின்றன. எழில் காந்தன் என்ற பெயரில் பாடிய "எவர் வேண்டுப்?" என்ற கவிதையில் பின்வருமாறு பாடுகிறார்.

எவர் வேண்டும் சொல் தமிழா-உனக்கு
எவர் வேண்டும் சொல் தமிழா

www.padippakam.com



தமிழென்னும் தாய்தன்னை தாதியென்றாக்கிய
தமிழ்ப் பேசும் முன்னணி வேண்டுமா? - இல்லை
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
என்னும்
தளபதி அவர் படை வேண்டுமா?
சிறியென்னும் நரியை நம்குகைதன்னில் புகவிட்ட
சிங்களக் கூலிகள் வேண்டுமா?-இல்லை
சிறியை எதிர்த்ததாற் சிறையினில் அடைபட்ட
செல்வர் தம் வெல் படை வேண்டுமா?

இத்தகைய தீவிர தமிழுணர்ச்சி ஒரு கவிஞனின் அகண்ட சிந்தனையை, மனிதாபிமானம் மிக்க சிந்தனையை மழுங்கடித்தமையையும் அவரது கவிதைகள் காட்டுகின்றன. ஓர் இனத்தின் மீது வைத்த தீவிர பற்று இன்னொரு இனத்தின் மீது கண்டிப்பாக மாறுவது இதன் தர்க்க ரீதியான வளர்ச்சி. மொழிப்பற்று வேறு, மொழி வெறி வேறு மொழிப் பற்று மனிதாபிமானம் சேர்ந்தது, மொழி வெறி அரசியல் சார்ந்தது.

''உரிமைக் குரலைப் திருகத் தகுமோ'' (9.4.61) என்ற சுதந்திரன் கவிதையில் நீலாவணன்,

கழி மண்டைகளே செவி கொண்டிடுவீர்
விழி தேவையிலை வழிகாட்டிகள் நாம்
மொழி வேன் உமக்கு எனவே மொழியும்
இழிபெண் சிறிமா விழி முன் தொடுபோர்

எனப் பாடுகிறார்.

''சிங்களக் கூலிகள்'' எனும் கவிதையில்,

சிங்கள மொழியெனும் சிறு நரி. உன்னைத்
தின்ன வருவதோ நீயுரி என்றும் பாடுகிறார்.

இழி பெண் சிறிமா என்பதும் இன்னொரு மொழியைச் சிறு நரி என்பதும் தமிழ் உணர்வு அரசியலாக மாறியதால் வந்த கருத்துக்கள். இப்போக்கு நீலாவணனின் தமிழ்

படிப்பகம்

www.padippakam.com



உணர்ச்சிக் கவிதைகளிற் பெரும்பான்மைப் போக்கு அல்ல என்பதும் ஈண்டு குறிப்பிடற்குரியது.

தீவிர தமிழுணர்வு, தமிழ்ப் பெருமை பேசும் காவியங்களே சிறந்த காவியங்கள் என்றும் ஆரியர் பெருமை பேசும் கம்பராமாயணம் போன்றவை சிறப்பற்ற காவியங்கள் என்ற கருத்துக்கு நீலாவணனை இட்டுச் செல்கிறது. இது தி.மு.க. கருத்தாகும்.

''அழு பெண்ணே'' என்ற கவிதையில் நீலாவணன் இப்படிக் கூறுகிறார்.

கன்னித் தமிழால் மெருகிட்ட
க்ம்பன் காமக் களியாட்டை
உன்னி உயரப் படிக்கின்றார்
உதவாக் கருத்தைக் கலையென்பார்
கண்ணிற் பார்வையில்லாத
கபோதிக் கூட்டந்தனையெண்ணி
விண்ணின் மதியமெனு முகத்தில்
விசனம் காட்டிச் சிரி பெண்ணே.

கம்பராமாயணத்தை தமிழருக்கு எதிராக ஆரியப் பெருமை கூறும் காவியம் எனவும், ஆபாசக் காவியம் எனவும் அண்ணாதுரை பாணியில் கருத்துரைக்கிறார். நீலாவணன்.

''சிரி பெண்ணே'' என்ற தலைப்பில் மஹா கவி சுதந்திரனில் ஒரு கவிதை எழுதினார்.

கம்பராமாயணத்தை எரிக்க எண்ணுபவரைப் பார்த்துச் சிரி பெண்ணே என்பதாக அது அமைந்துள்ளது

அழகுத் தமிழிற் கம்பன் பாட்டு
அதனுக்கிணையாய் எது உண்டே
ஒழுகிப் பெருகும் கவிதைத் தேன்
ஒரு சிற் சிலர்கள் உணராதே

www.padippakam.com



பழுதுண்டு அதனை எரிஎன்று
பறை தட்டுகிறார் அடி பெண்ணே
கழுதைக்கு அது ஓர் பொருளன்றே
காலால் இடறப்படும் ஒன்றே தமிழச்சி!
பழி அச் செயலைப் பழிகண்ணே!
பதர் ஒத்தவரைச் சிரிபெண்ணே!

என மகாகவி பாடுகிறார். மகாகவியும் சுதந்திரனில் தமிழ் உணர்வுக் கவிதைகள் பாடியவர். முருகையனும் அவ்வாறே, பின்னாளில் இவர்கள் தம்மை வேறுவகையாக வளர்த்துக் கொண்டனர். கட்சியோடு தம்மை அன்றும் வெளிப்படையாக இணைத்துக் கொண்டவர்களன்று. ஆனால் நீலாவணன் அப்படியன்று. நீலாவணனின் இயல்பும், சூழலும், கிடைத்த நண்பர்களும் இவர் கட்சிக் கவிஞனாகக் காரணமாயிருந்திருக்கலாம். ஆக 1947-தொடக்கம் 1960 வரைக்குமான காலப்பகுதியில் நீலாவணன் எமக்குத் தீவிர தமிழ் உணர்வும் தமிழ் வெறியும் மிக்க குறிப்பிட்ட ஒரு அரசியற் கோட்பாட்டைக் கொண்ட கட்சியின் கவிஞனாகக் காட்சி தருகிறார். இக்கட்சிப் பிடிப்பு அவரின் விரிந்த பார்வையைக் கூடக் குறுக்குமளவு சென்றதற்கு கம்பராமாயண எதிர்ப்புக் கவிதை சிறந்த உதாரணமாகும்.

1947 இலிருந்து 1960 வரைக்குமுள்ள நீலாவணனின் இலக்கிய வாழ்வுக் காலத்தில் அவர் தமிழ் உணர்வுக் கவிதைகள் மாத்திரமன்று, நல்ல காதல் கவிதைகளும் பாடியுள்ளார்.

ஆரம்பத்தில் 50களில் இவரது காதல் கவிதைகள் வெறும் சாதாரண காதல் கவிதைகளாகவே இருந்தன. அவற்றை நாம் காதற் செய்யுட்கள் என அழைக்கலாம்.

''என்னடி வந்திடும் நட்டம்'' எனும் தலைப்பில் எழுதிய கவிதையிற் பின்வருமாறு கூறுகிறார் (50களில்)

படிப்பகம்

www.padippakam.com



கொல்லைக் கிணற்றடியோரம் — வேலி
எல்லையில் நான் நின்ற நேரம்
முல்லைச் சிரிப்பினைக் காட்டி — காதல்
மூட்டியதேன் போதையூட்டி

53 சுதந்திரனில் கே. சி நீலாவணன் என்ற பெயரில் ''ஓடி வருவதென்னேரமோ?'' என்ற தலைப்பில் எழுதிய கவிதையில்,

வானத்தில் மதியம் வருகுது — உன்
வண்ணமுகம் என்முன் தெரியுது
முல்லை மலர் பூத்துக் குலுங்குது
முத்துப் பற்கள் கண்ணிற் துலுங்குது.

எனப் பாடுகிறார்.

ஓரம், நேரம், காட்டி, ஊட்டி, உருகுது, தெரியுது, குலுங்குது, துலங்குது என்ற அடியின் ஈற்றில் வரும் மோனைகளும் கருக்களும் பழைய பாணியிலேயமைந் தவை. எவரும் எளிதாக எழுதி விடும் சாதாரண செய் யுட்கள் இவை.

எனினும் காலம் செல்லக் காதல் கவிதைகளைக் கூறும் பாணியில் நீலாவணன் சில நகாசு வேலைகளைக் கையாளுகிறார். உவமை உருவங்களைக் கையாளும் விதத்திலும் காதலை வெளிப்படுத்தும் விதத்திலும் சில புதுமைகளைக் கையாளுகிறார்.

''அந்தக் கவலை ஏன்?'' என்னும் கவிதையில் காதலி இவ்வாறு வர்ணிக்கப்படுகிறாள்.

பஞ்சுப் பயிற்றங்காய் போலும்
குஞ்சி இடையாள் குயிற் குரலி
கஞ்ச மலராம் இதயத்தே
காதல் வண்டாய்ச் சுழல்கின்றாள்.

www.padippakam.com



கத்தரியன்ன கன்னத்தாள்
கடலின் அலையிற் குழல் கொண்டாள்
முற்றிய முதுரைப் பதுமையிலே
பற்றிய இளமைப் படர்வல்லி

குயிற் குரலி என்ற உவமையும், கஞ்சமலராம் இதயம் என்ற உருவகமும் பழமையேயாயினும் கத்தரியன்ன கன்னம் புது உவமையாகும். (இது எந்தளவு பொருந்தும் என்பது வேறு விடயம்) முற்றிய முதுரைப் பதுமையிலே பற்றிய இளமைப் படர் வல்லி என்பது புதிய சொல்லாட்சியாகும்.

''சென்றதடி மாலை'' (31.5,59 சுதந்திரன்) எனும் கவிதையில் காதல் கூறப்படும் விதம் சுவையானது.

தென்றல் காதலனைச் சுடுகிறது. முன்பு ஒரு தடவை தானும் காதலியும் செய்த செயலுக்கு தென்றல் பழி வாங்குகிறது என்பது கவிஞரின் புதிய கற்பனை.

நெஞ்சோடு நெஞ்சை
நிமிர்த்தி இறுகணைத்துக்
கொஞ்சுகையில் அங்கே
குறுக்கிட்டு - கொஞ்சமிடம்
என்றிரந்தும் ஈயவிலை
என்ற பழம் கோபமடி
தென்றல் நமக்கிட்ட தீ.

முத்தொள்ளாயிரம் தொடக்கம் பாரதிதாசன் சுரதா வரை இப்புதிய கற்பனைகளை தமிழ் இலக்கியத்தில் நிறையக் காணலாம். எனினும் புதிய புதிய உவமைகளைக் கூறுவதில் நீலாவணன் முன்னின்றார்.

''தோடம்பழச் சுளை போல் தொங்கும் நிலவு''
''எலுமிச்சம் பூச் சிரிப்பு''
''வெண்டாமரை மலரில் வீழ்ந்துருளும்
நீல நிற வண்டாம் விழி''

www.padippakam.com



''செவ்வரத்தம் பூப்போலும் செவ்விதழ்''
''புத்தன் திருக்கோயில் போலிரண்டு
கொங்கைகள்''
''அமாவாசையிருள் கூந்தல்''
''அணில் கோதாமுந்திரிகைப் பழக்கன்னம்''
''மீனாட்சி மலர்ப் பற்கள்''
''இளம் நுங்கு மார்பு''

என்ற பல உவமைகளை நிலவு பெண்களின் பற்கள், விழி, இதழ், மார்பு, கன்னம் ஆகியவற்றிற்கு நீலாவணன் தந்துள்ளார்.

தமிழ் உணர்வு மீதூரப் பெற்றவரான நீலாவணன் காதலைத் தமிழோடும் தமிழரின் போராட்டத்தோடும் இணைத்துக் கூறுவது அவரது இன்னோர் பாணி. ''தென்றலே சென்று கூறு'' என்ற கவிதையில் காதலிக்குத் தூது விடுகின்றார். எதற்கென்றால் ஆவணியில் நடக்கவிருக்கும் அறப்போரில் பங்குபற்றத் தன்னோடு காதலியையும் வந்து சேர் என்று. ''அப்போது யார் தடுப்பார் அத்தான்'' (சுதந்திரன் 50) இதற்குச் சிறந்த உதாரணம். அதில் ஒரு பகுதி இது.

போரெல்லாம் முடிந்த பின்னர்
புதியதோர் தமிழகத்தை
ஆரெல்லாம் தூற்றினாரோ
அவ்வரெல்லாம் போற்ற நாங்கள்
ஆரத்தான் தழுவிநின்றே
அன்புப் போர் புரிவோம் அப்போ
யாரத்தான் தடுப்பார் நீங்கள்
யாழைத்தான் மீட்டும் போது.

போர் முடிந்தபின்தான் காதல் என்பதும் யாழாக அப்போது தன்னை மீட்டும் படியும் காதலி இங்கு காதலனை வேண்டுகிறாள். பாரதிதாசன் இப்பாணியில்

www.padippakam.com



நிறையப் பாடல்கள் பாடியுள்ளார். பாரதிதாசனின் கவிதைகளில் ஊறித் திளைத்த நீலாவணன் கவிதைகளும் அவர் பாணியிலமைவது வியப்பன்று.

காதல் கவிதையினூடாக தமிழ் உணர்வை மாத்திர மன்று, சீதன எதிர்ப்பு, சீர்திருத்தக் கருத்துகள், உயர்வு தாழ்வு பேதம் ஆகியவற்றையும் நீலாவணன் தொட்டுள்ளார். ''நான் என்ன விலைப் பொருளா?'' (தமிழின்பம் 1961) எனும் கவிதையில் சீதன எதிர்ப்புத் தொனிக்கிறது.

பணம் எதற்கு நின்னுடைய
பவள இதழ் நடுவினிலே பற்கள் என்ற
குணம் உயர்ந்த நித்திலங்கள்
குவிந்திருக்க அதன் வெயிலில்
குளிர் காய்தற்கே
கணமெல்லாம் ஏங்குகின்றேன்
காசென்ற இருட்டறையில்
காலைநீட்டிடப்
பிணமா நான் அஞ்சாதே
பிழை செய்யேன் இங்குந்தன்
பிரிய அத்தான்.

என்பது அக்கவிதை. ''பட்டமரம்'' என்ற நெடுங்கவிதை ஏழைக்கும் பணக்காரருக்குமிடையேயுள்ள உறவு சரி வராமற் போனதைக் கண்டமை மறைமுகமாகச் செய்யும் ஒரு கவிதை.

நீலாவணனின் தனித்துவம் மிக்க காதல் கவிதைகளு முண்டு. எனக்குப் பிடித்த என் கவிதை என்ற கட்டுரையில் தனக்குப் பிடித்த கவிதையாக.

மண்ணிடை இரவுக் கன்னியின் ஆட்சி
இன்னும் தேயவிலை-இளம்
தென்னையின் ஓலை பண்ணிய
இன்பப் பாட்டுகள் ஓயவிலை.

படிப்பகம்

www.padippakam.com



என்று தொடங்கும் பாடலைக் கூறுகிறார். 1961ஆம் ஆண்டு புதினம். தீபாவளிக் கவிஅரங்கில் இக்கவிதை பிரசுரமானது. ''போகின்றேன் என்றா சொன்னாய்'' என்ற தலைப்பில் இது அவரது வழி நூலில் பிரசுரமாகியுள்ளது. இதன் உரிப்பொருள் இரங்குதல், முதற்பொருள் நெய்தல், நெய்தல் நிலச்சூழல் இதில் அழகாக வந்துள்ளது. நீலாவணனே கூறுவது போல ''புதிய உருவம், சந்த நாதம், குதித்து ஓடும் நடை அழகு, இசை தோய்ந்த சொல்லடுக்கு உவமைகளும் உருவகங்களும் வாழ்வுப் பிரச்சினையை மிக மென்மையாகத் தொட்டுச் செல்லும் கலைப் பண்பு, இக்கவிதையில் உண்டு. நீலாவணனின் நல்ல காதல் கவிதைகட்கு இது ஒரு உதாரணம்.

வேகமும், தீவிரமும் மிக்க நீலாவணனுக்கு உள்முகச் சிந்தனைகள் உருவாகி வாழ்வு பற்றி தத்துவார்த்த ரீதியான சிந்தனைகள் தோன்றத் தொடங்கியமைக்கு இக்கவிதை உதாரணம்.

''பிழையாய் நினையாதீர்'' (1964) என்ற கவிதையில் உண்மை பற்றிக் கூறுகிறார். ஒருவகையில் அவர் இது வரை எழுத்துக்களில் விமர்சனமாகவும் இது அமைகிறது எனலாம்.

என்னைப் பிழையாய் நினையாதீர்
எதனால் என்பீர்
அவசரமாய்
என்னைப் பற்றி நானேயாய்
எடுத்துக் கூறல்...அதையுன்னி
என்னைப் பிழையாய் நினையாதீர்
பொன்னைப்
புகழைப் பெரும் பொய்யைப்
பூவைப் பெண்ணைப் புது நிலவைப்
பண்ணிப் படைத்து விட்டிருந்தால்
பாவம் இவையே போதாவோ?

படிப்பகம்

www.padippakam.com



உண்மை எனவும் ஒன்றிங்கே
உலவும்
அதனால் அடியார்காள்
என்னைப் பிழையாய் நினையாதீர்.

உண்மை பற்றிய ஒரு தேடல், நாட்டம் நீலாவண னுக்கு ஏற்பட்டிருக்கலாம்.

''அஞ்சலோட்டம்'' (18-6-65 சுதந்திரன்) எனும் கவிதையில் அஞ்சலோட்டம் ஆரம்பமாகிறது. ஓட்டத்தில் முன்னால் வந்தவனும் வெற்றி பெறுவான் என்று எதிர் பார்த்தவனுமான ஒருவனை பின்னால் வந்த அசமந்தம் ஒருவன் வென்று விடுகிறான். வீரனென்றவரே பின்னால் வீணரென்றுரைக்கின்றார்கள்.

இறுதியில் நீலாவணன் பின்வருமாறு முடிக்கிறார்.

அட தம்பி! ஓட்டமன்று
அஞ்சல் தான் இதில் முக்கியம்
இனியதில் கவனம் உள்ளம்
உடையாதே போ! போ! போ! இந்த
உலகமோர் அஞ்சலோட்டம்.

காதல் கவிதைகளிற் தோய்ந்த நீலாவணனுக்கு சங்கப் பாடல்கள் அதுவும் அகத்திணைப் பாடல்கள் நன்கு பிடித் திருக்க வேண்டும் அகத்திணைப் பொருள்களைச் சங்க காலப் புலவர் பாடுவது போன்ற உத்திமுறைகளிலும் பாடியுள்ளார். ''இனிக்கும் அன்பு'' (9-8-59 சுதந்திரன்) கவிதை இதற்கு உதாரணமாகும் தோழிக்குத் தலைவி சொல்வதுபோல தனக்கும் காதலனுக்கும் ஏற்பட்ட தொடர்பை, உறவைத் தலைவி தோழியிடம் அகவற் பாவில் கூறுகிறாள் சங்ககாலக் கவிதைப் பாணியில் அது அமைந்துள்ளது. ஆனால் எளிய நடையில் அமைந் துள்ளது. உதாரணத்திற்கு அதனின்று சில வரிகள்

www.padippakam.com



காதலின் கல்லறையில் கைதானான் என்றுலகம்
ஏதேனும் பேசி எனை எள்ளி நகைத்திடுமா?
தோழியே! நம் பண்பு. தொன்மையது
நாணுகிறேன்.
ஊழின் செயலன்று ஒப்பாரோ,
பெண்ணென்றால்
பேயும் இரங்குமவர் பேசுவதைப் பேசட்டும்
ஆயின் இனிக்குமவர் அன்பு.

சங்ககாலக் கவிதைகளைப்போல அச்சொட்டாகவும் கவிதைகள் பாடியுள்ளார். அவரது வழி நெடுங் கவிதையிற் சங்ககாலப் பாமுறையில் அமைந்த மாவலி வழிந்து என்று ஆரம்பிக்கும் கவிதை இதற்கு நல்ல சான்று. நீலாவணன் இறப்பின் பின் எஸ். பொ. தினகரனில் (17-2-75) எழுதிய நீலாவணன் நினைவுகள் எனும் கட்டுரையிலும் இக்கவிதையை நீலாவணனின் கவிச் சிறப்புக்கு உதாரணம் காட்டுகிறார்.

மாவலி வழிந்து மலிவளம் சுரக்க
தேயிலை இறப்பர் செழிக்கும் வெற்ப!
அயலவர் நின்னையும் தன்னையும் சுட்டி
லயனெலாம் தூற்றும் அவர்க்கிவள் அஞ்சாள்
வரைவின் நிவந்த பனிப்புகள் சூழ்ந்து
விரைவினைத் தடுக்கவும் வரையின் பிளந்த
கட்டைகள் காலில் இடறவும் அஞ்சா
நள்ளென்யாமம் நஞ்சிருள் புகுந்து
கள்ளன் போலும் கரந்து வந்தனையால்
உயிரினும் இவள் பால் உனக்குறுகாமம்
பெரிதேயாயினும் பேதை
அட்டைக் கடிக்கே அஞ்சுவள் மன்னே!

இதில் வரும் விடயமும் வெற்ப! அவர், நிவந்த வரை, நள்ளென்யாமம், உனக்குறுகாமம், அஞ்சுவள்



படிப்பகம்

www.padippakam.com



மன்னே போன்ற சொற்களும், கவிதை யாப்பும், கவி கூறும் முறையும் சங்ககாலக் கவிதைகட்கு அருகில் எம்மை இட்டுச் செல்வன.

நீலாவணன் பாரதிதாசனின் செல்வாக்கினின்றும் விடுபட்டு நீலாவணனாக எழுதத் தொடங்கிய காலத்திலே தான் அவரிடமிருந்து நல்ல காதல் கவிதைகள் கிடைக்கத் தொடங்கின.

பெரும்பாலும் இத்தகைய காதல் கவிதைகளை அவர் 1960ன் முற்பகுதிகளில் எழுதியுள்ளார். அத்தகைய சிறந்த கவிதைகளையே வழியில் அவர் தொகுத்துள்ளார். அகத்திணை மரபை வெளிப்படையாகக் கூறும் பாடல்கள் ஏறத்தாழ பதினெட்டு அதில் உண்டு.

நீலாவணனின் அகத்திணை சங்ககால அகத்திணை மரபைப் போன்றது. அது உலகியல் சார்ந்தது. பாரதி போல அது ஜீவாத்மா - பரமாத்மா சம்பந்தமானதல்ல, அன்றாட சாதாரண மனித உள - உடல் இயல்புகளை உணர்வுபூர்வமாகவும் அழகாகவும் கூறுவன அவர் காதற் கவிதைகள்.

''வெறிக்குது'' எனும் கவிதையில் வரும் காதலனின் உடல் காதலியின் அன்பினால் தீயிற்பட்ட மாந்தளிர் போல் கருகுகிறது. அவனது முத்தம் காதலனுக்கு பித்தம் விளைக்கிறது. அவள் நினைவாற் செயல்யாவும் பிழைக் கிறது. அவள் விழிகளின் வீச்சு நெஞ்சிற் புண்ணை உண் டாக்குகிறது. அதனால் விளைந்த காயத்திற்கு அவள் இளமுலைகள் ஒத்தடங்களாக அமைகின்றன. அவள் இதழின் சாறு கன்னலென இனிக்கிறது. அது பழம் கள்ளைப்போல காதலனுக்கு வெறி தருகிறது.

''ஓயுமோ பித்தம்'' எனும் கவிதையில் காதலனுக்கு காதலியின் கட்டவிழ்ந்த செம்மாதுளைப் பற்கள் வெறி

படிப்பகம்

www.padippakam.com



மூட்டுகின்றன. வாழையினது உள் மடல் போன்ற மென்மையான வழுவழுப்பான கன்னக் கதுப்புகள் பித்தம் ஏற்படுத்துகின்றன. கோழையையும் வீரனாக்குகிறது அவளின் நினைவு. அவளது உறவை நித்தமும் பெறக் காதலனின் மனம் துடிதுடிக்கிறது.

''தயவு செய்து சிரியாதே'' கவிதையில் காதலி தளிருடலை நெளிப்பதும், சிரிப்பதும், பார்ப்பதும், மறுகாலும் சிரிப்பதும, விரல் நுனிகளைக் கடிப்பதும், வெகுளி போல் நிற்பதும் பகிடினிடுவதும் காதலனால் தாங்க முடியவில்லை. உயிரைத் திருகாதே என்று காதலியை கெஞ்சி வேண்டுகிறான் காதலன்.

''போகவிடு'' கவிதையில் காதலியின் அறையுள் இரவில் புகுந்த ஒரு காதலன் ஆரம்பத்தில் இவ்வாறு கூறுகிறான்.

உறவு முறை கூறியெனை வழிமறித்தாய் நின்றேன்
ஒருவருமில்லாமனையில் உள்ளறையும் சென்றோம்.
பிறரெதையும் பிழையாயும் பேசிடுதல் கூடும்
பெண்ணேயான் பிறகொருகால் திரும்பி வரல் நேரும்.
பெறலரிய பேறென்று நின்னகத்து வாய்ந்த
பேரின்பக் கனிகளினைப் பிசைந்து பிசைந்துண்டே
இரவு முழுவதுமினிய அமளிமிசையாறி
இருள் பிரியுமுன்னரெனை ஏக விடு பெண்ணே.

ஏகவிடு பெண்ணே என்றவன் ஏகவில்லை. இரவு முழுவதும் காதலியுடனிருக்கிறான். பின் பொழுது புலர்வதைக் கண்டதும் போகவிடு என்கிறான். அதன் பின் சூரியோதயத்தைக் கண்டதும் கதவையடை என்கிறான். பிரிய முடியாத அவன் மனத்தின் ஆவேசத்தைக் இக்கவிதை காட்டுகிறது. பெண்ணின் மார்பகங்களை பேரின்பக் கனிகள் என நீலாவணன் வருணிக்கிறார். ஆன்மீகச் சொற்களையே உலகியலுடன் இணைத்து விடுகிறார் கவிஞர்.

www.padippakam.com



காதலன் துயரம் மாத்திரமன்றி காதலி துயரும் கவிதைகளில் வருகின்றது.

''துயில் வரவில்லை'' எனும் கவிதையில் காதலிக்கு பனிகூட சுட்டுப்பொசுக்குகிறது. தேய்ந்த நிலா பித்தம் தருகிறது. தன் நிலையை உணர்த்தும் காதலி அக்கினித் தீர்த்தத்துள் தன் ஆத்மா குளிப்பதாகக் கூறுகிறாள் (மகா கவி பாரதியின் கவிதையில் வரும் காதலியின் மனம் சுடர் விளக்குப்போல துடித்தமையுடன் இது ஒப்பிடத்தக்கது)

''கொஞ்ச வந்தான்'' எனும் கவிதையில் வரும் காதலி இவ்வாறு கூறுகிறார்.

கேட்டு நின்றான்: மறுத்தேன்' கடைக்
கண்களினால் கிளறி
மீட்டும் வந்தான். என்னைப் பாட்டுரைத்தான்.
அவன் மென்மையிலே
பூட்டவிழ்ந்தேன்; கரும்பூட்டிச் சென்றான்
பின்னர்
போயித்து யின்றேன்.

இங்கெல்லாம் உலகியற் காதல், சாதாரண மனித உள் உடல் இயல்புகள் காதலன் காதலியின் ஏக்கம், வாட்டம், பயம், இன்பம், துன்பம் என்பபனகூறப்படு கின்றன. (இலங்கையர்கோன், எஸ். பொன்னுத்துரை சிறுகதைகளிலும் இத்தன்மையுண்டு. அவர்களின் தொடர்பும் பண்டைய இலக்கியங்களான சங்கப் பாடல் கள், முத்தொள்ளாயிரம், திருக்குறன் (காமத்துப் பால்) கலிங்கத்துப் பரணி (கடை திறப்பு) பாரதிதாசன் பாடல் கள் ஆகியவற்றின் நீலாவணன் கொண்ட ஈடுபாடும் இவ்விடத்தில் நினைவு கூரற்குரியவை)

பொதுவாக நீலாவணனின் கவிதைகளில் (சிறப்பாக அவரது காதல் கவிதைகளில் பின்னணியாக வரும் கருப் பொருளிற் பாடப்படும்) இயற்கை வருணனை சிறப்பான தாக இருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



வசந்தம் எனும் கவிதை இதற்கு நல்ல உதாரணம் அது இவ்வாறு ஆரம்பிக்கிறது,

பச்சையான இலைகளிற் பொன்முலாம்
பாவ ஊரின் பசும்புல் வெளியெலாம்
பச்சைப் பாலகன் போல பகற் பயில்
பாய்ந்த வெண்பனிப் பந்தடித்தென்னுடை
குச்சியுள்ளும் குறும்பு புரிந்தனன்
கோபித்தென்பயன் இந்தப் பழம் கிழம்
அச்சடா வென அந்தக் குறும்பனின்
அதர மீதிலேன் முத்தம் அளிக்கிறேன்.

இயற்கையைப் பாடுதல் அதிகமான கவிஞர்கள் வெறும் சொற் சக்கைகளையே எம்முன் வைக்கின்றனர். நீலாவணன் இப்போக்கிற்குப் புறநடையானவர். இது பற்றி ஏ. ஜெ. கனகரத்தினா பின்வருமாறு கூறுகிறார்.

பிறவிக் கவிஞனாகிய அவர் (நீலாவணன்) இயற்கைவளம் கொழிக்கும் கிழக்கு மாகாணத்திலே பிறந்ததினால் இயற்கையின் அழகில் லயித்து அதனைப் பாடியதில் வியப்பில்லை மற்றக் கவிஞர்களின் கைகளிலே பட்டு நைந்து போன பொருள்களுக்கு புதுமெருகாட்டிப் புத்துணர்வோடு அவற்றைப் பாடினார்.

இயற்கையை வர்ணிக்கும் நீலாவணனின் முறை அலாதியானது. மரபு வழிக்கற்பனைகளுடன் புதிய புதிய படிமங்கள் பலவற்றையும் நீலாவணனின் இயற்கை வருணனையிற் காணலாம்.

''போகின்றேன் என்றோ சொன்னாய்'' கவிதையில் வேப்பமரம், தென்றல் காற்றின் வெறியைச் சாடுவது போல அசைகிறாள். ஆனால் அத்தென்றலே அவளை விரகதாபத்துடன் கூடுகிறான். பாடல் பின்வருமாறு.

www.padippakam.com



வேம்புக் குமரி தென்றல் காற்றின்
வெறியைச் சாடுகிறாள் — அந்த
வீம்புக் காரன் விரகப்பேயோடவனைக்
கூடுகிறான்.

காதல் எனும் கவிதையில்

இருளென்ற கரும்போடு இரவெல்லாம்
அடைகாத்து ஈன்ற குஞ்சுபோல
சூரியன் உதிக்கின்றான்.

நீலாவணன் கவிதைகளிற் கையாளும் உருவங்கள் தனியாக எடுத்துக் கூறப்படவேண்டியவை.

1940 தொடக்கம் 1960 வரையுள்ள நீலாவணனின் இளமைக்காலப் பருவத்தின் ஆக்கங்களில் தமிழுணர்வு, பகுத்தறிவுச் சிந்தனை சீர்திருத்தப் போக்கு காதல் என்பனவே மிகுந்திருந்தன. சிறப்பாக அவரது கவிதை களில் இப்பண்கள் காணப்பட்டன. எனினும் அவரது ஆரம்ப சிறுகதைகளிலும் இப்பண்பைக் காணலாம். பட்டமரம் சிறுகதை பற்றி ஏற்கெனவே கூறப்பட் டுள்ளது. இக்காலகட்டத்தில் பெரும் செல்வாக்குப் பெற் றிருந்த அண்ணாதுரை, கருணாநிதி போன்றோர் கதை கூறும் பாணியிலேயே இக்கதைகள் அமைந்துள்ளன. எனினும் 1960களின் ஆரம்பத்தில் அவரது காதல் கவிதை களில் சில மாற்றங்களைக் காணுகிறோம். உலகியல் சார் புள்ள காதல் கவிதைகளை அவர் பாடுவதையும் பாடும் முறையிலும் காதல் வயப்பட்டோரின் உணர்வுகளையும், அப்பண்புகட்குப் பின்னணியாக அமையும் கருப்பொருட் களை விளக்கும் முறையிலும் நீலாவணனிடம் சில தனித் துவங்களைக் காணமுடிகிறது. அவை அவரை ஒரு சிறந்த கவிஞராக எமக்கு இனம் காட்டுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



# 1960இன் முற்பகுதியிலிருந்து 1966-67 வரை நீலாவணன் ஆக்கங்கள்

**1960**ன் முற்பகுதியிலிருந்து **1966-67** காலப் பகுதியில் நீலாவணனின் கவிதைகளில் அவருக்கு வாலாயமான காதல் உணர்வு தொடர்ந்திருப்பினும் இக்கால கட்டத்தில் எழுதப்பட்ட அவரது பல கவிதைகள் ஆன்மீக உணர்வு, அகவய நோக்கு, வாழ்க்கையில் ஒரு வகையான தேடல் என்பனவற்றையே கருக்களாகக் கொண்டுள்ளன.

இக்காலகட்டத்தி இவரது கவிதைகளின் பெரும் பான்மையான போக்கு இவை என நாம் கொள்ளலாம்.

**1960**இல் சுதந்திரனில் வந்த ''குறிக்கோள்'' என்ற கவிதை இப்போக்கினைக் கட்டியம் கூறுகிறது. குழந்தையாய்ப் பிறந்த நதி, இளமைப் பருவமுற்று, கிழ நதியை நையாண்டி பண்ணி புது வழி புகுந்து ஓடுகிறது. பரம் பொருளைத் தேடுபவர்களை நையாண்டி செய்து செல்லும் அந்நதி மலையொன்றின் முன்னால் தன் அறியாமையை உணர்கிறது. செருக்கொழிந்த நதி கிழநதி சென்ற பாதையிற் செல்லத் தொடங்குகிறது. நதி இங்கு ஒரு குறியீடு ஆன்மீகத்திற்கும், நாத்தீகத்திற்கும் பழமைக்கும் புதுமைக்குமிடையே நமக்கும் இப்போரில் ஆன்மீகம்-பழமை வெல்கிறது. நீலாவணனின் சிந்தனை வேறுதிசை நோக்கிச் செல்ல ஆரம்பித்தமையை இது குறிப்பாலுணர்த்துகிறது. தன்னை உணரத் தொடங்கியதன் வெளிப்பாடாக இக்கவிதையை நாம் கருதலாம்.

**60**இல் சுதந்திரனில் எழுதிய ''விமர்சனம்'' என்ற கவிதையில் இறைவன் மானிடனை ஏன் படைத்தான் என்று கேட்கிறார். உலகத்தை இறைவன் சரியாகப் படைத்தான். மனிதனே அதைக் கெடுத்தான் என்பது

படிப்பகம்

www.padippakam.com



இக்கவிதையின் உட்பொருள். உலகத்தின் அலையெறியும் கடல், ஆகாயம், அனல், காற்று மலை, அருவி அனைத்தையும் படைத்தான் இறைவன்.

இத்தனையும் கற்பனையின்
எழில் மிளிர இயற்றியென்ன?
அத்தனையும் அழித்துலகின்
அழகமைதி குலைத்துவிடும்
புத்தியிலா மானிடமாம்
புழுவினையும் படைத்தனையே
சத்தான உன் காவியத்தின்
அங்கேதான் ஓட்டையடா

என்று கூறுகிறார்.

மலைக்குமுன் ஆறு தன்னை உணர்ந்தது போல இங்கும் நீலாவணன் இறைவன் முன் மானிடன் புழு என்ற முடிவுக்கு வருகிறார். உலகை அழகாக இறைவன் படைத்தான். மனிதன் இறை கட்டளையை மீறியதால் பாவத்திற்கு ஆளானான் என்பது விவிலிய வேதம் கூறும் செய்தி.

இக்காலகட்டத்தில் வெளியான இவரது ஆன்மீக நாட்டமும், குறியீட்டுப் பாங்கும் அமைந்த கவிதைகளாக ''ஓடமும் நானும்,'' (1964) ''புதிர்'' (1964) ''பிழையாய்'' ''நினையாதீர்'' (1964) ''எட்டாத ஒன்றாய்'' 1964) ''பலூன்'' (1964) ''துயில்'' (1964) ''விளக்கு'' (1963) போன்ற கவிதைகளைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

''ஓடமும் நானும்'' எனும் கவிதையில் தனிமையை இனிமையாய்த் தருக்கி மகிழும் ஒருவன் கரையில் நின்று ஓடத்தைக் கண்டு புது நம்பிக்கையுடன் அதைத் தள்ளிப் பாயினை விரித்து கலங்கரை விளக்காய் விளங்கும் திசையொன்றினை நோக்கிப் பயணத்தை ஆரம்பிக்கின்றான். ஓடம் ஒரு பாறையில் முட்ட ஓடத்தில் ஓட்டைவிழுந்து சலம் ஏறுகிறது. ஆழியின் நடுவினில் ஓடம் ஆழ்கிறது

www.padippakam.com



நிலையில் அதன்மேல் மனிதன் ஓட்டையை அடைப்பதற்கும், உட்புகுந்த நீரை வெளியேற்றவும் ஓடத்தில் ஏறிய மனிதன் மிகுந்த முயற்சி எடுக்கிறான். முயற்சி வெற்றி தருகிறது. ஓடம் ஓடத் தொடங்குகிறது

பாய்ந்ததென்ன ஓடப் பயணமா? ஓடமா?
ஏது என் குறிக்கோள் இனுமொரு முறை போய்
அது கல் மீதினில் அடிபட உடையலாம்
புதிய ஊர் வரையிலும் போகவும் போகலாம்
எது நடந்தாலுமென்?

எனச் செல்கிறது அக்கவிதை. வாழ்வு பற்றிய ஒரு விசாரம் இக்கவிதையில் அழகாகப் புலப்படுத்தப்படுகிறது. ஓடம் ஒரு குறியீடு வாழ்க்கையின் குறியீடு. வாழ்க்கையுள் அமிழ்ந்தி வாழ்க்கையைச் சீர் செய்து அன்றாடம் அல்லாடிக் கொண்டிருக்கும் நாம் செல்லும் திசையை மறந்து விடுகிறோம் என்ற ஆன்மீகக் கோட்பாட்டை இங்கு வெளிப்படுத்துகிறார்.

புதிர் (1964) எனும் கவிதையில் அவர் வாழ்வு பற்றிச் சிந்திப்பதும் அவரின் சிந்தனைக்குச் சில விடயங்கள் பிடிபடாமற் செல்வதும் புலப்படுத்தப்படுகிறது.

சிந்தித்தால்
ஏதோ சிலவே விளங்கி
அதே
சந்தேகமாகி
ஒரு சந்தேகமாய்
வந்து நிற்கும்
(உண்மை வழக்கம்) இப்பெரியவையும்
அதைத் தொடர்ந்தும்
சிந்தித்தால்...
மீண்டும் சிலவே விளங்கி

மறு
சந்தேகமாகத்
தளிர்ந்துக் கிளைத் தோங்கும்
இந்த விதமே
இது நடந்து கொண்டிருந்தால்
எந்த வழி என்றீர் இனி.

என முடிக்கிறார். உலகின் இயல்பு வெற்றியும் தோல்வியும் என்ற இயல்பு நோக்கு நீலாவணனின் கவிதையில் புலப்படுகிறது.

"பலூன்" (18.10.64 தினகரன்) கவிதை உலக நிலையானமையை மறைமுகமாய் உணர்த்துவது. பலூன் காற்றடைத்த பை ஆகும். (நம் உடம்பும் காற்றடைத்த பைதான்.)

இப்பெரிய உன் காற்றும் பொட்டலம்
பட்டென்றடையும்.
நானறிவேன் ஆயுனு மென் நண்பா
உன் கையிலுள்ள
வானத்து வில்லையை வண்ண பலூன்
வாங்கி வைத்து
கொஞ்சி மகிழ்ந்து குலவி விளையாடுதற்கென்
நெஞ்சு விளைகிறதே என்கிறார்.

உடம்பு அழியும் என்பது தெரியும். ஆனால் வாழ விரும்புகிறோமே என்ற ஏக்கம் மறைமுகமாய் ஒலிக்கிறது.

"புற்று" அவரது நல்ல கவிதைகளுள் ஒன்று ஊரிலுள்ள புற்றையுடைக்க ஆறுமுகம் ஆசிரியர் தலைமையில் மாணவர் புறப்படுகிறார்கள். பூசாரியின் எச்சரிக்கையை மீறிப் புற்று வெட்டப்படுகிறது. புற்றுக்குள் உள்ள புடையனுக்குப் பயப்படாமல் வெட்டுகிறார்கள்.

www.padippakam.com



கல்வியொளி கண்டறியாக் கசட்டுமனப்
பொந்துக்குள் கரந்து வாழும்
பொல்லாத உட்பகைவர் உருவம்போல்
புடையன்கள்.

என அறியாமை, கெட்டகுணங்களுக்கும்

புடையனை உவமிக்கிறார். புற்றை அழித்தல் இங்கு ஒரு குறியீடு.

9-12-67இல் வீரகேசரியில் வெளிவந்த "முத்தக் காட்சி" கவிதையும் இவ்வாறே. முத்தக் காட்சி பிரயோசனமில்லாத கிழங்கு. ஆழமாக எங்கும் வளரும் அதை வேரோடு வெட்ட வேண்டுமென்கின்றார்.

அறிவெனும் மண்வெட்டி கொண்டு
அடி மனத்தை அகழ்ந்து கொத்து
அரித்தரித்துக் கிழங்ககற்று
ஆசையெனும் கிழங்ககற்று

என்பது கவிஞர் கூற்று. புற்றை இடைத்தல், காடு வெட்டுதல், கிழங்கு தோண்டி அதை அழித்தல் என்பன குறியீடுகளாகும். அறியாமையை அகற்றுதல் என்பது இவற்றில் அர்த்தங்களாகும். "புகை வண்டியும்" (25-3-67 தினகரன்)வாழ்க்கைப் பயணத்தைக் குறியீடாகக் காட்டும் கவிதையே.

31-5-63இல் "விளக்கு" என்ற தலைப்பில் நீலாவணன் எழுதிய கவிதை குறிப்பிடத்தக்கது. (இக்கவிதை 12-4-64இல் சுதந்திரனில் வந்துள்ளது.)

வீடு இருண்டு கிடக்கிறது இருளினால் வரும் இடர்களைக் கவிஞர் உணர்கின்றார். விளக்கேற்ற முனைகின்றார். கலன்களில் கலன் கல்னாய் எண்ணெய்களிலிருந்தும் பல கோலங்களில் விளக்குகள் இருந்தும் குச்சியை உரசி விளக்குகள் ஏற்றப்படவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



எண்ணெய் விளக்காய் விடுமா?
எண்ணையை விட்டெரிக்கும்
ஏனந்தான் விளக்காமோ?
எரிகின்ற திரியா
மின்னி இரைந்தே புகைந்து
எரியுந் தீக்குச்சி
விளக்காமோ?

என்ற தத்துவ விசாரம் புரிந்து
விளக்கென்னில்
மேற்குறித்த யாவும்
ஒன்றும் குறையாமல் உள்ளே உள்ளனவே
ஏனும் உள்ளுக்குள் ஒளியில்லை
வழி தெரியவில்லை

என்று கூறும் கவிஞர் இறுதியில் விளக்கேற்றித் தெம்போடிருப்பதாகக் கூறுகிறார். இந்தக் கவிதைதான் க. வீ. ஐ. நீலாவணன் இறந்தபின்

இந்தத் தலைமுறையில் தாகூர் இவனென்று
எந்தத் தலைமுறையும் ஏற்றிடுமே

என்று பாட வைத்திருக்க வேண்டும். தாகூர் ஆன்மீகக் கவிதைகளைப் பாடியவர். குறியீட்டுப் பாங்கிலி பல விடயங்களை உணர்த்தியவர். நீலாவணனின் 1960-1970 இடைப்பட்ட காலக் கவிதைகள் பலவற்றில் அப்பண்புகளைக் காணுகின்றோம்.

இதனால் அனைத்தையும் சமமாகப் பார்க்கின்ற ஒரு குணமும் ஏற்பட்டிருக்கலாம். புதுக்கிணறு தோண்டிய ஆறுமுகம் வாணம்விட்டு ஒலிபெருக்கி எடுத்து நடத்துகிற விழாவையும் எழுத்தாளன் புத்தகம் வெளியீட்டு நடத்தும் விழாவையும் பேதமின்றி ஒன்றாகக் காணுகின்றார். ''விழா'' (28-3-68 வீரகேசரி) எனும் கவிதையில் பிச்சைச் சம்பளம் எடுத்த பொன்னியம்மா செத்ததுகூட அவர் மனதைத் தாக்கியுள்ளது. ''போதியோ பொன்னியம்மா''

www.padippakam.com



(21-6-66 சுதந்திரன்) என்ற இக்கவிதையில் பொன்னியம்மா போய் வருக போதியோ என்று இறங்குகின்றார். ஒரு பிச்சைக்காரக் கிழவிக்கு இரங்கும் கவி உள்ளத்தை அதிற் காணுகின்றோம்.

ஆன்மிகப் போக்கு தத்துவசிந்தனை, உள்முகத் தேடல் ஆகியவற்றில் அவர் மனம் படிந்திருந்த போது தான் உருவகக் கதைகளையும் 64இல் தினகரன் வீரகேசரியில் எழுதிக் குவித்தார். சிந்தனைக் குறியீட்டுப் பாங்கில் புலப்படுத்த உருவகக் கதைகள் சிறந்த வழியாகும்.

இத்தகைய சிந்தனைகளின் வெளிப்பாடே ''துயில்'' (கலைகள் புரட்டாதி 19'4) எனும் கவிதையாகும்.

இந்த உலகில் இருந்த சில நாழிகையில்
எந்தச் சிறிய உயிரும் என் இம்சையினால்
நொந்தறியா யாதுமெனை நொந்ததிலை
என்கின்ற
அந்த இனிய

நினைவில் நித்திரை கொள்கின்ற தன்னை எழுப்ப வேண்டாம் என்று மனைவிக்கு உரைக்குமாப்போல கூறும் நீலாவணன் அதன் இறுதி அடிகளில் இயற்கை யொடும் சாவியலை எள்ளிச்சிரி என முடிக்கிறார்.

மேற்குறித்த கவிதைகளினின்று 1960—70க்கிடைப் பட்ட காலத்தில் அவர் கவிதைகளில் ஆன்மீக நாட்டம் முக்கிய பங்கு வகுத்தமை புலனாகின்றது.

ஆன்மீக நாட்டத்துடன் பிரதேசப் பண்பைப் புலப் படுத்தும் சில கவிதைகளும் இக்கால கட்டத்தில் எழுதப் பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். தீப்பள்ளயம் (தினகரன் 62) ''பசையற்ற மண்'' (10-7-67 சிந்தாமணி) என்பன சில உதாரணங்களாகும். தீப்பள்ளத்தில் நீலாவணனின் அயற் கிராமமான பாண்டிருப்பு திரௌபதையம்மன் கோயில் திருவிழாவில் மக்கள் கடைகளைச் சுற்றுவதும், சாமான்

www.padippakam.com



கள் வாங்குவதும், கோயிலிற் பாரதம் படிப்பதும் அழகாகச் சொல்லப்படுகின்றன.

பெட்டிக்கென்ன விலை இதைப் பார்க்கிலும்
பெரியதாக எடுதம்பி ஓம் அந்த
சட்டிக் கென்ன தர அண்ணை கைப்பிடிச்
சருவப் பானையில் எவ்வளவு ஆக்கலாம்
வட்டா சின்னன் அரசியலை தொங்கினால்
வடிவு

என்று கடையில் பேரம் பேசுவோரைச் சரியாக நம் முன் நிறுத்துகிறார் நீலாவணன். கடைகளைச் சுற்றி அறுத்த கவிஞர் நித்திரை செய்கிறார். நித்திரையில் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் கோயிலைக் கட்டிப் பாரதப் படிப்பை ஆரம்பித்து வைத்த கிழவர் தாதனைக் காணுகின்றார். தாதனைப் பற்றி அவர் வர்ணிக்கும் பாணியில் தாதன் மீது அவர் கொண்ட விருப்பு புலன கின்றது.

''பசையற்ற மண்ணில்'' நீலாவணை ஊர் மண்ணின் இயல்பு வர்ணிக்கப்படுகிறது.

பொன் மெத்தை போல கால் புதையும்கடலோர
மண்ணின் படியில் மலிந்து கிடப்பின்
புன்னை மரமும், அடம்பும் பிரம்புகளும்

என்று தொடங்கி அந்த மண்ணைப் பசையற்ற மண் என வர்ணித்து அப்பசையற்ற மண்ணிலே பசுமை படைத்து வசையற்று வாழ்ந்த தம் கிராம மக்களை, உழவரைப் புகழ்கின்றார்,

''கல்முனைக் கடற்கரை'' [வீரகேசரியில்] எனும் கவிதையில் பாலைவனம் போல மணற் காடு இதற்கு பாரினிலே எங்குமிலை ஈடு என்று பரவசிக்கின்றார் ''காணேன் உன்னை'' [10-12-61 தினகரன்] என்ற கவிதையில் பாண்டிருப்புத் திருவிழாக் கடை வீதியில் தம்மை கொணரப் படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



இவ்வண்ணம் தம் பிரதேசத்தின் மீதும், மண்ணைப் பொன்னாக்கும் உழவர் மீதும் அவர் வைத்த அன்பும் பற்றும் தான் வேளாண்மை காவியம் எழுத அவரைத் தூண்டியிருக்க வேண்டும்.

## 1967இன் பிற்பகுதியில் (1966-67) இறக்கும்வரை (1975) நீலாவணன் ஆக்கங்கள்

1970க்குப் பின் வந்த நீலாவணனின் கவிதைகள் சமூக அக்கறையுடையனவாய், உலகியல்பு, வாழ்வின் நம்பிக்கை சார்ந்தனவாய் அமைந்துள்ளன. இவருடைய சிறப்பான பாடல்கள் சிலவும் வேளாண்மை காவியமும் உருப் பெற்றது, இக்காலப் பகுதியில்தான். இத்தகைய சிந்தனைப் போக்கிற்கான ஆரம்பத்தினை அவர் 18.9.69இல் ஈழ நாட்டில் எழுதிய உச்சியை நோக்கி ஓடும் ஆறுகள் கவிதை சுட்டி நிற்கின்றது.

நடப்பது நடக்கும், வாழ்க்கை ஒரு பயணம் என்ற போக்கில் அமைந்த சிந்தனையை இக்கவிதை பிரதிபலிக்க வில்லை. வங்கக் கடலில் ஊற்றெடுத்த கங்கை மக்களுக்கு தரளமும் மணிகளும் தந்து பாய்கிறது. தன்னை மக்களின் தொண்டன் எனக்கூறிக் கொள்கிறது. வையகம் வாழவும், அவர்களின் பெரும் பசி போக்கவும் மாபெரும் பயண மொன்றை மேற்கொள்வதாகக் கூறுகிறது. மலைச் சிகரங்களை அடைவதே அதன் குறிக்கோள். உச்சியை அடைந்து பொதுமையைப் பேணிப் புது உலகாள்கிற அதிகாரத்தினை அடைவதே அதன் குறிக்கோள். முன்பு ஆன்மீகத்திற்குப் பாவிக்கப்பட்ட குறியீடு இங்கு சமூகப் பிரச்சினை கூறப் பாவிக்கப்படுவதனை அவதானிக்கலாம்.

அறுபதுகளின் பிற்பகுதியில் அவர் எழுதிய ''வெளுத்துக்கட்டு'' (1967) அவரது சமூகப் பிரச்சினையை சிறப்பாகக் காட்டும் கவிதையாகும்.

www.padippakam.com



உழைப்பவர் தம் உலகுமீது போடியாரே
உம்போல உட்கார்ந்து ஊரைமேய்க்கும்
பிழைப் புடையோர் பெரியோராய் வாழ நாமும்
பேசுதற்கும் உரிமையற்ற புழுக்கையாமோ?
புழுக்களல்லர் தொழிலாளர் கவனம் நாளை
புரட்சித் தீ உம்வாயைப் பொசுக்கித் தின்னும்

என்று தொடங்கி பறை அறைவோன் பறையில் அடித்துப் பயிற்சி பெறுவதும் சேலை வெளுப்போன் கல்லில் சீலையை மோதி அடிப்பதும் தம் வஞ்சினத்தைத் தீர்க்கச்செய்யும் ஒரு பயிற்சி என்றும் கூறுகிறார்.

அவரது புகழ் பெற்ற ''பாவம் வாத்தியார்.'' கவிதையில் சமூகக் கொடுமைகளுக்கும், ஊரிலுள்ள கூரண்டும் பெரியவர்களுக்கும், ஊரின் அறியாமைக்கும் எதிராகப் போராடிய ஒரு ஆசிரியர் அரச நிர்வாகத்தினால் மாறுதலுக்குள்ளாகிறார். ஆளும் வர்க்கமும் அரசும் இணைந்து செயல்படுவது மறைமுகமாகக் காட்டப் படுகிறது.

மாற்றம் தொலைக்கோ மனிசர் உள்ள ஊர்தானோ? என ஒரு அடி வருகிறது. மனிதப் பற்றும், சமூகப் பிரக்ஞையுமுள்ளவர்கள் மனிதர். எங்கிருப்பினும் அங்கு தம் தொண்டைத் தொடங்குவர். நகையுணர்வூடே, குத்தலும் கிண்டலுமாக எழுதப்பட்டுள்ள அருமையான நெடும் கவிதை இது.

இத்தகைய சிந்தனைப் போக்கு நீலாவணனுக்குத் திடீரென்று வந்ததொன்றன்று. 1950களிலிருந்து அவர் எழுதி வந்த கவிதைகளில் மக்கள் நலம் சார்ந்த கருத்துக்கள் காணப்படுகின்றன. ''பட்டமரம்'' என அவர் எழுதிய (1952) கவிதையிலேயே சமூக ஏற்றத்தாழ்வுகட்கு எதிரான கருத்துக்களை அவர் வைத்துள்ளார். 13.4.57 வீரகேசரியில் வெளிவந்த ''புத்தாண்டுக் கும்மியில்''

படிப்பகம்

www.padippakam.com



லாட்டும் பசிப் பிணி துன்பமெலாமோட
வாழ்வு வளம்பெறக் கும்மியடி என்றும்
வல்லரசாதிக்கப் போட்டியொழிந்திந்த
வையமெலாம் சாந்தி மார்க்கத்திலே
தொல்லை ஒழிந்தவோர் தூய உலகத்தை
தோற்றுவிப்போமென்று கும்மியடி.

என்றும் பாடுகிறார்

'துவக்கு பணியை'' என்ற கவிதையில் (சுதந்திரன்)

வீதி அளப்பதிலும் சாதி குழப்பலிலும்
வீரம் இருக்கவில்லைத் தம்பி

என்று பாடுகிறார்.

25-12-60இல் தினகரனில் வெளிவந்த ''மாங்குயிலே பாடு'' கவிதையில் இக்கருத்து இன்னும் விரிவாகக் கூறப்படுகிறது.

கலகமூட்டும் பசியை வெல்ல வழி சொல்ல முடியுமாயின் அழகு நிலா வாழ்க என்றும் உழவர்களின் மனதில் உள்ள தூரம் தீர்க்க முடியுமாயின் மயிலே ஆடுவாயாக என்றும். மனிதன் என்ற குலத்தை மடமையாற் பிரித்து வைக்கும் கொடிய கொள்கையைப் பிய்த்து வீசமுடியுமாயின் தென்றலே வீசு என்றும் உலகம் முழுதும் ஒற்றுமையைத் தோற்றுவிக்க முடியுமாயின் குயிலே பாடென்றும் ஆணையிடுகிறார் கவிஞர். தான் ரசித்துப் பாடிய இயற்கைகளையே மக்கள் நலனாட்டத்திற்குச் சார்பாக இருக்க முடியுமாயின் உங்கள் வேலைகளைச் செய்யுங்கள் அல்லாவிடில் சும்மா இருங்கள் என்று கருத்துப்பட இக்கவிதையிற் கூறுகிறார்.

கா—6

www.padippakam.com



''பாய் விரித்து வையுங்கள்'' (1959) என்ற கவிதையில் சாதிப் பிரிவினைக் கெதிராக அவர் குரல் ஒலிக்கிறது.

பறயின் மகள் தூங்குகின்ற
அறைக் கதவை நள்ளிரவில்
பதுங்கிச் சென்று
குறைமதியில் மது வெறியால்
தட்டுகிற கோமான்காள்
கொஞ்சம் நில்லீர்.
நிறையுடையாள் பொன்றாத
கற்பென்னும் நிதியுடையாள்
நெஞ்சை ஈர்த்தால்
முறையாக மணப்பதிலே
வசையென்ன? ஏறிடுமோ
முதுகில் மேளம்

எனக் கேட்கும் நீலாவணன் பகுத்தறிவுப் பாதையொன்றின் மூலமே இதனைத் தீர்க்கலாம் என்றும் கூறுகிறார். ''நொண்டி நெஞ்சில் பாய் விரித்துவையுங்கள் பகுத்தறிவு நல்லெண்ணம் படுத்துத் தூங்க'' என்று முடிக்கிறார்.

1960க்கு முன்னர் ஏழை பணக்காரன், ஏற்றத்தாழ்வு, சமூக வேறுபாடுகள், அடக்குமுறை இவற்றிற்கு எதிராக அடங்கி ஒலித்த அவரது குரல் 1960இலும் அதற்குப் பின்னரும் சற்று பெரிதாக ஒலிக்கிறது எனலாம். இக் காலகட்டத்தில் பரவிய முற்போக்குச் சிந்தனைகளின் தாக்கம் நீலாவணனின் நோக்கில் மாறுதல்களை ஏற்படுத்தியிருக்கக்கூடும்.

இதே காலகட்டத்தில் அவர் எழுதிய வேளாண்மை எனும் குறுங் காவியம் தனித்து நோக்குதற்குரியது.

படிப்பகம்

www.padippakam.com



# வேளாண்மையும் நீலாவணனும்

''வேளாண்மை'' குறுங்காவியம் 1982இல் அச்சில் வெளிவந்தது. இக்குறுங் காவியத்தைப் பதிப்பித்து முன்னுரை எழுதிய வ அ. இராசரத்தினம் பின்வருமாறு எழுதுகிறார்;

> ''இக்காவியத்தில் இயந்திர நாகரிகத்தால் கற்பழிந்து விடாத மட்டக்களப்பின் குமரியழகையும் மட்டக்களப்பாரின் விருந்திருக்க உண்ணாத வேளாண்மைத் தனத்தையும் வெளியுலகிற்குக் காட்டத்தான் நீலாவணன் ஆசைப்பட்டிருக்கிறார் என்பது துலாம்பரமாகிறது''

மட்டக்களப்பின் படுவாங்கரைப் பிரதேசத்தில் வாழும் விவசாய மக்களின் வாழ்வில் நடைபெறும் சடங்கு வகைகளையும், வாழ்க்கை முறைகளையும் கூறுவதே நீலாவணனின் பிரதான நோக்கம். அதற்கு இரண்டு போடிமார்களின் குடும்பங்களுக்கிடையேயுள்ள உறவினைக் கருவாக எடுத்துக்கொள்கிறார். கந்தப் போடியின் மகன் செல்லையா, அவர் மைத்துனர் அழகிப் போடியின் மகள் அன்னம்மா, குடும்பப் பகையால் பிரிந்திருந்தவர்கள் இணைவதுதான் கதை. மிகச்சாதாரண ஒரு காதல் கதைதான். ஏன் கதையில்லை என்று கூடச் சொல்லலாம். எனினும் அதன் மூலம் நீலாவணன் புலப்படுத்த வரும் இயந்திர நாகரிகம் புகாத மட்டக்களப்பின் பழைய வாழ்க்கை முறை படிப்பதற்குச் சுவை தருகிறது

குடலை, கதிர் என்ற இரு பகுதிகளை இக்காவியம் கொண்டுள்ளது.

குடலை என்ற பகுதியில் ஒரு போடியாரின் வீட்டு நடைமுறைகள் கூறப்படுகின்றன. அவர் வயலுக்குச்

படிப்பகம்

செல்லுதல், வயலிலே பொலி களம் வைத்தல், அரக்குப் புதைத்தல், பூதங்கள் பொலியை அள்ளிப் போகாதவாறு இறைவனை வேண்டுதல். சூடுபோடுதல், நெல் தூற்றுதல், போன்ற எட்டு நாளில் நடைபெறும் வயல் வேலைகள் கூறப்படுகின்றன. பின்னர் வேலையாட்களுக்கும், மற்றவர்கட்கும் பொலியிலே பங்கு போடப்படுகிறது. அதன் பின்னர் களவட்டிப் பொங்கல் வைக்கப்படுகிறது எல்லாம் முடிய வயலில் இருந்து மீண்டும் ஊர் திரும்புகிறார். ஊர் திரும்பும் வழியில் சாமி, செல்லையனிடம் தான் கற்பகத்தைத் திருமணம் செய்த முறையைக் கூறுகிறான். அதன் மூலம் வசியம் வைத்தல், அதை வெட்ட மந்திரம் செய்தல், முறைப்பெண் வீட்டுக்குள் மைத்துனன் சென்று நின்று மணக்கும் திருமணமுறை, தத்தம் குடிகளைப் பற்றி (குடிமரபு மட்டக்களப்பின் சமூக அமைப்பின் தனித்துவமான அம்சம்) பெருமைகள் என்பன கூறப்படுகின்றன.

அதன் பின்னர் ஊரில் குடும்பங்களுக்கிடையே நடைபெறுகின்ற உறவுகள் தொடர்புகள் கூறப்படுகின்றன

கதிர் எனும் பகுதியில் அன்னம்மாவின் சாமத்தியச் சடங்கு, கள்ளுத்தவறணைக் காட்சி, புதுவருடப் பிறப்பு, அன்று நடக்கின்ற சடங்கு முறைகள், வேட்டைக்குச் செல்லுதல், கோயில் திருவிழா, கூத்து ஆடுதல் என்பன கூறப்படுகின்றன.

ஒரு காலத்தில் மட்டக்களப்பு மக்களின் ஒரு பகுதியினரிடையே காணப்பட்ட வாழ்வு முறைகளை அறிந்து கொள்ள நீலாவணனின் கவிதைகள் பேருதவி புரிகின்றன. ஒரு வகையில் கவிதை நடையில் சுவாரஸ்யமான தகவல்களை ஒரு மானிடவியலாளனுக்கு இது அளிக்கிறது எனலாம்.

கந்தர் போடி கடுக்கனில் பிடித்த சால்வைக் கரையினை கவனமாக எடுத்து வெளிக்கிடுகையில் கடப்படி

www.padippakam.com



மாவில் நின்ற காக்கை எச்சமிட 'வெள்ளைப்பீ' நல்ல சகுனம் என்று பொன்னு, கூறுதல், பொன் வெள்ளி, தங்கம், ஐம்பொன், சேல்லாக் காசு, மஞ்சாடிக் கொட்டை பவளம், சங்கு, தென்னங்கள், சாராயம், இடம்புரி வலம்புரிக்காய் ஆறுமுகக்காய் எல்லாம் வைத்து பொலி வைத்தல்; அந்திப்பால் கறந்து வந்து, களிமண்ணால் அடுப்பு மூட்டி களவட்டிப் பொங்கல் பொங்குதல்; பச்சைப் பாம்பு, கன்னிக் கோழி, முட்டை, தென்னையிலே பிடித்த முதல் தேங்காய் கோழிரத்தம், சாராயம் என்பன கலந்து வசிய மருந்து செய்தல்.

சுரை புன்னைப் பூவைப்போல சுடச் சுடப் பிட்டும், காய்ந்த மரையிறைச்சியில் குழம்பும், நீர் வடித்த கட்டித் தயிரும், பால்பழமும் சேர்ந்த சாப்பாடு சாப்பிடுதல், கொடுவாய் மீன் பங்கை பெண்கள் தமக்குள் பரிமாறுதல். படையாண்ட குடியான் ; நான், பணிக்கொணா குடியான் அவன், காலிங்க குடியான் மற்றவன் எனக் குடிப்பிரிவு பெருமை பேசுதல்.

இருகரையும் நெல் குவித்து, நிறைமுட்டி சூரை மூடி விளக்கு வைத்து சாமத்திய வீட்டை ஒழுங்கு செய்தல், பாலறுகு மஞ்சள், வேளாண்மைவேர், அரைத்து பாலில் சேர்த்து, பெண்ணின் தலையில் ஊற்றல், சோற்றலாத்தி, குன்றிமணி பதித்த மாவுருண்டை ஆலாத்தி, மஞ்சள் நீர் ஆலாத்தி எடுத்தல், உறவு முறைக்காரர் மஞ்சள் ஊற்றி மகிழ்ந்து விளையாடுதல்.

சம்பலைத் தடவி நாக்கில் சலிப்பினை வழித்து அள்ளிப் பம்பலாய்ப் பருகுதல்.

ஆல் இலை காலுக்கிட்டு அரசிலை தலையில் தொட்டு புதுவருஷத்தில் மருந்து நீர் வைத்தல், பிட்டோடு தயிரும் சேர்த்து சர்க்கரைத் தேன் கொட்டி வட்டிலில் போட்டுப் புதுவருட சாப்பாடு சாப்பிடுதல்.

படிப்பகம்

www.padippakam.com



உடுப்புகள் கட்டி, மாத்துகள் புனைந்து ஒவ்வொரு கொலுவிலுள்ளாரும் எடுத்தடி வைத்த சதங்கை ஓசை ஒலிக்கக் கூத்தடுதல், என ஒரு சமூகத்தின் வாழ்க்கை முறையின் பிரதான அம்சங்கள் அழகாகவும், விபரமாகவும் பட்டியலிடப்பட்டுள்ளன வேளாண்மையில்.

கதையை மேலும் வளர்த்து பொன்னம்மா செல்லையா திருமணத்தின் மூலம் மட்டக்களப்பின் திருமணச் சடங்கு வழி முறைகளையும், செல்லையாவுக்குப் பிறக்கும் குழந்தையின் பிறந்த நாட் சடங்கு மூலம் மட்டக்களப்பின் மருங்கச் சடங்கு வழமைகளையும், பெத்தாக் கிழவியின் இறப்பின் மூலம் இறந்த வீட்டுச் சடங்குகளையும் புலப்படுத்த நீலாவணன் எண்ணியிருந்தார் என அறிகிறோம் (இத்தகவலை எமக்குத் தந்தவர் அவர் மகன் எழில் வேந்தன்)

விருத்தப்பாக்களில் காவியம் அமைந்திருப்பினும் அதில் வரும் பேச்சோசைப் பாங்கும், எளிமையும் காவியத்திற்கு வெகு சுவை தருகின்றன.

'ஆரங்கே பொன்னம்மா உன்
அடுப்படி அலுவல் ஆச்சா?
நேரமும் கடந்து போச்சே
நீ என்ன செய்கிறாய்? போய்ச்
சோறெடு சிவ சிவா ஏய்?
சுரைக்காயை என்ன செய்தாய்
நீறினை நெற்றியிட்டு
நெஞ்சினை வயலிலிட்டு
சோறொடும் மீனைப்பிட்டுச்
சுவைக்கின்றார் கந்தப்போடி

என்று ஆரம்பமானது காவியம்.

சாமாத்தியச் சடங்கையும், கூத்தையும் நீலாவணன் வர்ணிக்கும் பாங்கு சிறப்புடையது, மஞ்சள் தண்ணீரை ஆளுக்காள் மாறி ஊற்றுகிறார்கள். எல்லாம் உடம்பிலும் மஞ்சள் தண்ணீர் வண்ணாரக் கம்மாஞ்சி வாசலில் நின்ற

படி 'என் தலையில் மஞ்சளினை இப்படியா ஊற்றுவது? என்று கத்துகிறான். அழகிப் போடி போய்ப்பார்க்கிறார். யாரோ வெறியில் கம்மாஞ்சி தலையில் மஞ்சள் கறியைக் கொட்டிவிட்டார்கள். வெறியில் கம்மாஞ்சிக்கும் அது தெரியவில்லை.

தலைச் சோற்றுச் சுமையோடும்
தலைகெட்ட வெறியோடும் தள்ளம்பாறி
நிலை தவறக் குழம்பெல்லாம்
நெற்றியினால் வழிந்தோட
நின்ற கம்மாஞ்சி

தன் தவறுக்கு மன்றாட்டம் செய்து மீண்டும் சாராயம் கேட்பதும் அவனை போடியார் சமாளிப்பதும் சுவையான காட்சிகள்.

இக்காவியம் படிப்பதற்கு இன்பம் தரும் ஓர் காவியம், இதன் மூலம் கனமான தத்துவம், செய்தி எதனையும் கவிஞர் தரவில்லை. எனினும் நீலாவணனின் அவதானிப்புத் திறனும், அறிந்தவற்றைக் கவிதை ஆக்கும் திறனும், இதில் சிறப்பாக வெளிப்படுகின்றன. மட்டக்களப்புப் படுவான்கரை மக்களின் வாழ்க்கைக் கோலங்கள் இதில் மனோரதியப் பாங்கில் வெளிப்படுத்தப்படுகின்றன. தனி மனித உறவுகளின் அடிப்படையில் வாழ்க்கைக் கோலங்களை இரசிக்கிறார் நீலாவணன்.

மட்டக்களப்பு மக்களின் வாழ்க்கை முரண்பாடுகளோ வாழ்க்கை மாற்றங்களோ இதில் வெளிக்கொணரப்படவில்லை. இதனை நுஃமானின் கரவாகுவெட்டை பற்றிய நெடுங்கவிதையுடனும் மகாகவியின் ஒரு சாதாரண மனிதன் சரித்திரத்துடனும் ஒப்பு நோக்குவது நல்லது.

ஒரு வாழ்க்கைத் தத்துவத்தினைத் தராவிடினும், வாய் விட்டுப் படித்து ரசிப்பதற்கு உரிய காவியம் என்று இதனைக் கூறலாம்,

www.padippakam.com



இதுவரை நீலாவணன் பற்றிக் கூறிய குறிப்புகளை வைத்துக் கொண்டு பார்க்குமிடத்து 1950களிலிருந்து நீலாவணன் கவிதை சொல்லும் பாங்கிலும், கவிதைப் பொருளைக் கையாளும் விதத்திலும் காலந்தோறும் வளர்ந்துவந்த அல்லது மாறி வந்த கவிஞன் என்பது புலனாகின்றது. தமிழ், காதல், ஆன்மீகம், தத்துவம், சமூகம் என்று அவர் கவிதைகளும் சிந்தனையும் சென்றமையை அறிய முடிகிறது.

குறிக்கோள் என்னும் கவிதையும் பின்னால் எழுதப்பட்ட உச்சியை நோக்கி ஓடும் ஆறுகள் என்னும் கவிதையும் இவ்வளர்ச்சியைத் துல்லியமாக உணர்த்தும் கவிதைகளாகும்.

சிங்களவர் எதிர்ப்பாளராக இருந்த நீலாவணன் தான், அனைவரும் சமமாக வாழும் இலட்சிய உலகையும் நோக்கிச் சிந்தித்தார். தன்னுணர்வுக் கவிதை பாடிய நீலாவணன் சமூகமாற்றம் பற்றிய கவிதைகளையும் பாடினார். பழமையில் இறுக்கமான பற்றுக் கொண்டிருந்த நீலாவணன்தான் பேச்சோசைப் பண்பும், புதிய கருத்துக்களும் தரும் கவிதைகளை யாத்தார்.

காலத்தின் மாறுதல்களைப் புரிந்து உள்ளார்ந்த எதிர்ப்புடன் அக்கால மாற்றங்களை உள் வாங்கித் தானும் வளர்ந்துவந்த ஒரு கவிஞர் நீலாவணன் எனலாம். அவர் காலத்தில் வாழ்ந்த கவிஞர்களுடன் அவர் ஒப்பிட்டு ஆராயப்படவேண்டும்.

## நீலாவணனின் தனித்துவங்களும் கவி உலகம்

மட்டக்களப்புப் பிரதேசத்தின் வாழ்க்கை முறை, பேச்சு வழக்கு, சூழல் இயற்கை என்பனவற்றைக் கவிதையிற் கொணர்ந்த மட்டக்களப்பின் முதற் கவிஞர் நீலாவணன் எனலாம். இவரது பிரதேசப் பற்றே இதற்கான காரணமாகலாம். ஊரின் பெயரையே தன் பெயராக வைத்தும் திருமணம் புரிந்ததும் மனைவி வீட்டுக்கு

படிப்பகம்

www.padippakam.com



(பாண்டிருப்பு) செல்லும் மட்டக்களப்பு வழமுறை யாயினும் தான் பிறந்த ஊரான பெரிய நீலாவணையில் வாழ்ந்தமையும், தன் வீட்டுக்கு வேளாண்மை என்று பெயரிட்டமையும் இவரின் அழுத்தமான பிரதேசபற்றுக்கு உதாரணங்களாகும். இப்பிரதேசப் பற்று இவரின் கவிதைப் போக்கினையும், சிந்தனைப் போக்கினையும் நிர்ணயிக்கும் முக்கிய காரணியாகச் செயற்பட்டுள்ளது. இப்பிரதேசப் பற்று இவர் காலத்தில் வாழ்ந்த மகாகவியி னிடத்தும் காணப்பட்டமை இங்கு நினைவு கூறற்குரியது.

தமிழ் மரபு பேணுவதில் ஆழமான உறுதி கொண் டவர். அவரது கவிதைப் போக்கினை இம்மரபுறுதியும் நிர்ணயிக்கின்றன. தமிழ் யாப்பு மரபில் இவர் கொண்ட உறுதி அவரது வழி எனும் நெடுங்கவிதையில் தெளிவாகப் புலனாகின்றது தமிழ் அன்னையின் முன் தம் வாதங் களை மரபு வழிப்புலவரும் [அறவழிப்புலவர்] புதுமைப் புலவரும் [புதுமைவாணனும்] எடுத்துரைக்கின்றனர். இதில் வரும் அறவழிப் புலவன் நீலாவணனே.

சிந்தனை அறியார் ஆழ்ந்த
சிந்தனை சிறிது மில்லார்
பேர் பெற நினைந்து செய்யுள்
பிண்டமே செய்யும் பித்தர்.

என்று புதுக்கவிதைக்காரர்களை சாடுகிறார் என்று அவர் மகன் எழில்வேந்தன் கூறியமை இங்கு நினைவு கூறற்குரியது. தனிப்பட்டோரின் தவறான நடத்தை களிற் கொண்ட கோபம் அவர்களின் கொள்கை மீதும் இவருக்கு வெறுப்பை ஏற்படுத்திருக்கக் கூடும். இவரிடம் காணப்பட்ட இப்போக்கும் இவர் கவிதைப் போக்கு களைப் பாதித்த ஒன்றாகும்.

நீலாவணன் மிகு உணர்ச்சிகரமான ஒரு மனிதர். அறிவை விட உணர்வே அவரிடம் மேலாதிக்கம் செலுத் தியது. மென்மையான அவரது உள்ளமும், திடீரென

www.padippakam.com



உணர்ச்சிவசப்படுவதும் அவரது கவிதைப் போக்கினைப் பாதித்துள்ளன. உகைப் பற்றும், வாழ்க்கைப்பற்றும் மிக்கவர். அவர் கவிதைகளில் இதனைக் காணமுடிகிறது.

தன்னைச் சூழ உள்ள அநியாயங்களையும், கொடுமைகளையும், போலித்தனங்களையும் கண்டு பொங்கியவர், சிறுமைகண்டு பொங்கும் ஒரு கவிதா உள்ளம் அவரிடமிருந்தது. அவரது உணர்ச்சி கிண்டலாக, அங்கதமாக அவரது கவிதைகளில் வெளிப்படுகிறது. சமூகக் கொடுமைகளைத் தனிமனிதனாக நின்று எதிர்க்கலாம் என்று முயன்று தோற்றவர். (மு. தளையசிங்கத்தின் செயல்களுடன் ஒப்பிடலாம்)

கல்முனையில் ஒரு எழுத்தாளர் பரம்பரையை வளர்த்தெடுத்தவர் நீலாவணன். எம்.ஏ. நுஃமான், வி ஆனந்தன், முச்சாட்சரன், சத்தியன், கல்முனைப் பால், பாலமுனை பாறூக் என்ற இப்பட்டியல் நீளும். இவர்கள் சிறந்த இலக்கிய ஆர்வலர்கள். இன்றைய சிறந்த கவிஞரும், விமர்சகருமான நுஃமான் நீலாவணன் பண்ணையில் வளர்ந்தவரே. நீலாவணன் பற்றிப் பாடுகையில் நுஃமான் பின்வருமாறு பாடுகிறார்.

உன்னிடம் நான் வருகையிலே
நான் ஒரு சிறுவன்
கண்விடுக்காத பூனைக்குட்டி போல
உலகம் அறியா ஒரு பாலகனாய்
உன்னிடம் வந்தேன்

இவ்வண்ணம் ஒரு எழுத்தாளர் பரம்பரையை உருவாக்கும் ஆளுமை அவரிடம் இருந்தது.

பாரதிதாசன் தாக்கத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சீர்திருத்தவாத பகுத்தறிவுவாதக் கொள்கைகட்கும் ஆரம்ப காலத்தில் அதிகம் உட்பட்டவராயிருந்தார். இவரது காதல், தமிழ்க்கவிதைகளை இப்பின்னணி வெகுவாகப் பாதித்துள்ளது. நீலாவணன் கவிதையில்

படிப்பகம்

www.padippakam.com



புலப்படுத்தும் உலகியற் காதல், பாரதி மரபுக் காதலன்று. அது பாரதிதாசன் மரபுக் காதல்.

## நீலவணன் கவி ஆக்க நெறிமுறை

இது தனியாகவும் விரிவாகவும் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

பல்வேறு கவிதை நடைகளையும் மையமாகக் கையாளும் திறன் கொண்டவர். அவரின் கவி உருவாக்கலில் இவை பெரிதும் காணப்பட்டன. ஓசை நயம் இப் பாடல்களின் இன்னொரு சிறப்பம்சம் ''அழகு நிலம் வாழ்க'' (1965), ''மழை பொழிந்தது'' (1965), மட்டகளப்பு மாநகரம் (1972), ''காக்கைள்'' (1965)' ''பொன்னி வயற்புறம் போவதேன்'' (1959), ''கதிர் பொறுக்குகிறாள்'' (1967) போன்ற கவிதைகள் அவர் ஓசை நயம் மிக்க கவிதைகட்கு உதாரணங்களாகும்.

விதிர் விதிர்க்க வெயிலில் நின்று
வினை முடிக்கு முழவர் கண்டு
கதிரெனக் களிக்க நன்று
சாய்ந்து சாய்ந்து முன் நடந்து

கதிர் பொறுக்கும் வள்ளியின் கதிர் பொறுக்கலில் ஒரு லயமும், தாளமும் காணப்படுகின்றன.

நீலாவணன் ஓர் உருவகக் கவிஞர். இதுபற்றி ஏ. ஜெ. கனகரத்தினா பின்வருமாறு கூறுகிறார். ''கவிதைக்கு உருவக மொழி இன்றியமையாதது. அதிலிருந்துதான் கவிதை தனது சக்தியைப் பெரும்பாலும் பெறுகின்றது. நீலாவணன் உவமான உவமேயங்களை ஆள்வதில் கைதேர்ந்தவர். அவருடைய பெரும்பாலான கவிதைகளிலே இச்சிறப்பினைக் காணலாம்.''

உருவகம் கவிதையின் உயிர்களுள்ஒன்று. உருவகத்தின் மீது இவர் கொண்ட நாட்டமே உருவகக் கதைகள்

படிப்பகம்

www.padippakam.com



எழுதவும் காலாயிருந்திருக்கலாம். ஆன்மிகத்தைக் கருப் பொருளாகக் கொண்ட அவரது கவிதைகள் அனைத்தும் ஒரு வகையில் உருவகக் கவிதைகளே. ''கண்வளராய்,'' ''அறம்வாள் நாள்'' (18 5.59 தமிழோசை), முழு வாழ்வு (நவம்பர் 1960) மனோரஞ்சிதம்), ''பாமாலை சூட்டவா'' போன்ற கவிதைகள் இவரது உருவகக் கவிதைகட்கு உதாரணங்களாகும். ''பாமாலை சூட்டவா'' கவிதையில்,

> அரிவாளாம் பிறை நிலவு அகிலமெலாம் பாலை
> அள்ளிச் சொரிகின்றாள்; இளந்தென்றல்
> நுழைகின்றாள் சோலை

என்று தொடங்கிச் செல்கிறது. அரிவாள், பால் என்பன இங்கு நிலவின் வடிவத்திற்கு அவன் வெளிக்கும் வரும் உருவகங்களாகும். இவரது ''தாமரையின் ஊடலும்'' (சுதந்திரன் 1954) உருவகக் கவிதையாகும். கள்ளால் நிறைத்த வெள்ளிக் கிண்ணம் என்று தாமரையை உருவகிக்கின்றார். (சில உருவகங்கள் மனதில் உறுத்தலும் இங்கு குறிப்பிடற்குரியது).

11 2.62 வீரகேசரியில் வெளியான ''களங்கம்'' எனும் கவிதை உருவகக் கவிதை என்று மகுடமிடப்பட்டு வெளி வந்துள்ளது. இங்கு கூனல் தெங்கு, நிலவின் மீது காதல் கொள்கிறது. கர்வம் கொண்ட நிலவு அக்காதலை ஏற்க வில்லை; கூனல் தென்னையைப் பரிகசிக்கிறது. தென்ற லிடம் நிலவு தன் சோகம் கூறுகிறது. தென்றல் தாழ்வு மனப்பான்மையைக் கைவிட்டு மீண்டும் முயலும்படி கூனல் தென்னையிடம் கூறுகிறது. தென்னை தன்காதலை நிலவிடம் மீண்டும் வெளியிட்டுத் தோற்கிறது. தெங்கின் கூனலை நிமிர்த்தி அழகாக்கி, நிலவுடன் இணைக்க தென்றல் புயலாக வீசுகிறது. தெங்கின் கூனலை நிமிர்த்த மிகுந்த முயற்சி செய்கிறது. அதனால் தென்னை மரம் முறிகிறது. முறிந்த தென்னையைப் பார்த்து தென்றல்

www.padippakam.com



''ஆசையால் உன்னை நீ அழித்துக்கொண்டாய். அவள் (நிலவு) முகத்தினிலும் களங்கம் உண்டுதானே'' என்று கூறி தன் யாத்திரையைத் தொடங்குகிறது.

இதிலுள்ள 7 பாடல்களும் ஏழு சந்தங்களில் எழுதப் பட்டுள்ளன. நீலாவணனின் முத்திரைகைகளான சந்தமும் உருவகமும் இணைந்த பாடலுக்கு இது ஓர் சிறந்த உதாரணமாகும்.

உருவகக் கவிஞராக இருந்தமையால் அவரது பெரும் பாலான கற்பனைகள் கருத்துலகிலேயே சஞ்சாரம் செய் கின்றன. முத்தொள்ளாயிரம், நந்திக் கலம்பகம் புலவர் களின் சாயல்களை இவர் கற்பனைகளிற் காணலாம். தற்குறிப்பேற்ற அணியை அதிகமாக இவரது கற்பனை களில் காணமுடிகிறது.

குறியீடுகளை (Symbolism) இவர் கவிதை ஆக்கத்தில் அதிகம் பயன்படுத்துகிறார் சொல்ல வரும் சேதியினை, அல்லது உணர்வை குறியீட்டுப் பாங்கில் கூறுவது இதன் முறை. கூறுவது ஒன்றாயிருக்கும் அதன் பொருள் உயர்த் துணரக் கூடியதாய் இருக்கும். உருவகத்தின் இன்னொரு பரிமாணம் இது எனலாம். குறிக்கோள், ''உச்சியை நோக்கி ஓடும் ஆறுகள்,'' ''பணிப்பாலை'' (1966) ''அடி சடையா'' (1965) ''வெளுத்துக் கட்டு'' (1967) ''உறவு'' (1966) ''முருங்கைக் காய்'' (1965) ''தீ'' (1965) ''கடவுளே'' (1964) ''பயண காவியம்'' (1965) என்பன அவரது குறியீட்டுப்பாங்கான கவிதைகட்குச் சிறந்த உதாரணங்களாகும்.

இயற்கை வருணனை நீலாவணன் கவிதைகளில் காணப்படும் இன்னொரு அம்சமாகும். நிலவு கடல் சூரியோதயம் என்பன நீலாவணன் கவிதைகளில் அடிக்கடி வரும். இவை பற்றிப் புதிது புதிதாக வர்ணிப்பதில் நீலாவணனுக்கு மிகுந்த விருப்பம் என்பதை அவர் கவிதைகள் காட்டுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



நீலாவணனின் சில கவிதைகளில் ஒரு படப்பிடிப்பு முறையைக் காணலாம். இரண்டொரு சொற்களில் காட்சிப் படிமத்தைக் கண்முன் கொண்டு வரும் தன்மையை இதிற் காணமுடியும்.

கொஞ்சவந்தான், குனிந்தேன்
கொஞ்சிப் பின்வாங்கிச் சென்றேன்
கொஞ்சவந்தான் பிறகும் தடுத்தேன் விழி
கும்பிடவும்
கெஞ்சிநின்றான், பணிந்தேன், நகைத்தான்
கிட்ட வந்தான்

என்ற கவிதை வரிகள் இதற்கு உதாரணங்களாகும். ஓரிரு சொற்களில் காட்சிகளை எதிரே கொணரும் தன்மையை இதிற் காணலாம்.

தன் கணவர் கந்தப் போடியை வண்டியிலேற்றி அது போவதைப் பார்த்திருந்து விட்டு; மண்டபத்துள் பொன்னு வருகிறாள், வெளியே நாய் குரைக்கிறது. எட்டிப் பார்க்கிறாள். வெளியே கனகம்மா நிற்கிறாள். இதனைப் படம் பிடித்ததுபோல நீலாவணன் இவ்வாறு கூறுகிறார்.

வண்டி கோயிற் பாதை
வளைவிலே மறையுமட்டும்
நின்று பார்த்து அலுவல் எண்ணி
நேரமாச் சென்று பொன்னு
மண்டபத்துள்ளே போன
மறுகணம் நாய் குரைக்க
அண்டனள் எட்டிப் பார்த்தாள்
கனகம்மா நான்தான் என்றாள்.

www.padippakam.com



# நீலாவணன் கவிதைகள் பற்றிய சுருக்கமான விமர்சனக் குறிப்பு

பழமையிலேயும் மரபிலேயும் அதீத பற்றும், புதுமையில் நாட்டமும், அக்கறையும்கொண்ட உணர்ச்சிகரமான கவிஞன் உணர்வு ரீதியான அணுகல் முறை முன்னின்றமையினால் அறிவு ரீதியாக பார்க்கும் குணாம்சம் இவரிடம் குறைவாய் இருந்தது.

மனோரதிய இயற்பண்புவாதக் கவிஞனாக மிளிர்ந்த இவர், பிற்பகுதியில் சமூக முரண்பாடுகளை இனம் காணும் யதார்த்தவாதக் கவிஞராக மாற ஆரம்பிக்கின்றார். கவிதா அழகு நிரம்பி வழியும் இவர் கவிதைகளிற் கவிதைப் புலமை குறைவாகவேயுள்ளது. அவரது குணாதிசயமும் அவருக்குக் கிடைத்த இலக்கியத் தொடர்புகளும் இதற்குக் காரணங்களெனலாம். பெரும் கவிஞனாக வளர்ந்து சிறப்பதற்குரிய பண்புகள் நிறைய அவரிடம் காணப்பட்டன. வேளாண்மை அதன் ஆரம்ப முயற்சி எனலாம். இன்னும் பல காலம் வாழ்ந்திருப்பின் நம்மிடையே தமிழின் சிறப்பை மேலும் உயர்த்தும் ஒரு பெரும் கவிஞன் தோன்றியிருப்பான். காலன் அவரை அவரது 45-வது வயதிற் கவர்ந்து சென்றான்.

மட்டக்களப்பு இலக்கிய உலகிலே விபுலாநந்தருக்கும் புலவர் மணிக்கும் அடுத்து வைத்து எண்ணப்படுபவர். முன்னைய இருவரும் பழைய மரபுப் புலவர்கள், நீலாவணன் பழமையிற் காலூன்றிப் புதுமை வளர்த்த கவிஞர். விபுலாநந்தரின் பாடல்கள் இலகுவாகப் படிக்க முடியாதவை சில பாடல்கள் மிகக் கடினமானவை, புலவர் மணியின் பாடல்களோ மரபு தழுவினும் எளிமையானவை இலகுவாக விளங்குபவை. இருவரும் தமது கவிதைப் பொருட்களாக பழைய விடயங்களையே

www.padippakam.com



கையாண்டனர். இவ்வகையில் அவர்கள் பழைய மரபினரே. நீலாவணன் அப்படியன்று. நீலாவணன் பேச்சோசைப் பண்புள்ள ஒரு நடையினைக் கையாண்டார். தமது கவிதைக்குப் பொருளாக சமகாலப் பிரச்சினைகளை [தமிழ்ப் போராட்டம், ஏற்றத்தாழ்வு சீர்திருத்தம்] கருவாகக் கொண்டார். இவ்வகையில் மட்டக்களப்பின் நவீன கவிதையில் முன்னோடி நீலாவணன் என்று கூறலாம்.

ஈழத்து இலக்கிய உலகைப் பொறுத்தவரை இவர் பாரதிதாசன் பரம்பரையினராகக் காட்சி தருகிறார். தமிழ் காதல் கருக்களில் கவிதந்த தமிழுணர்ச்சிக் கவிஞராகவும் குறிப்பிட்டுப் பாங்கான ஆத்மீகக் கவி எழுதியவராகவும் கருதப்படுகிறார். பேச்சோசைப் பண்பை வெளிப்படுத்தியதுடன் மட்டக்களப்பு மக்களின் பண்பாடு பழக்கவழக்கங்களையும் அவர்களின் பேச்சு வழக்கினையும் கவிதைகளிற் கொணர்ந்தமை மூலம் ஈழத்துக் கவிதை இலக்கிய வரலாற்றில் அவர் ஈழத்து நவீன பேச்சோசைக் கவிதை முன்னோடிகளான மகாகவி, முருகையன் ஆகியோருடன் இணைந்தும் கொள்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்